தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௫	மலர்
௩௯	சோபகிருது, பங்குனி. 1964 மார்ச், ஏப்ரல்,	௧௧.

தாய்மொழிப் பற்று

புலவர் : திரு. நா. அறிவுஒளி.

நினைவை உருவாக்குவது மொழி. உணர்வோடு தொடர்புடையது தாய்மொழி. எந்த மொழி தன்னை மறந்த நிலையிலும் நம்பால் நிலைபெற்று நிற்கிறதோ அம்மொழியே தாய் மொழி. உணர்ச்சிகள் உச்சம் பெறும்போது அவ்வுணர்ச்சிகளை உண்மையான முழு உரிமையோடு வெளியிட உதவும் மொழி தாய்மொழி. தலைசிறந்த இன்ப உணர்ச்சி எழுச்சியிலும் ஆழ்ந்த துன்ப உணர்வெழுச்சியிலும் நம் உள்ளத்தெழுச்சியைச் செம்மையாகவும் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் எளிதாகவும் புலப்படுத்தப் பயன்படுவது தாய்மொழி.

தாய்மொழியின் திறன் அது வாழ்வுக்கூறு அனைத்திலேடும் பிரிக்க வியலாத வண்ணம் ஊடுருவி உள்ளுறைந்திருப்பதேயாகும்.

மக்கள் கண்டுபிடித்தவை எண்ணற்றவை. நுண்ணியல் துறையான அறிவியல். பொறியியல் கண்டுபிடிப்புக்கள் கூட அத்துணை வியப்புடையவையன்று. ஆயின் மொழியே மாந்தன் படைப்புக்களில் நனிவியப்புடையது. நுண் பொருள்களையும், பருப்பொருள்களையும் தன்னுள் அடக்கி விளக்கம் தருவது மொழியே. மொழியின்றேல் உலகப் பொருள்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் பெயரோ, விளக்கமோ இருந்திருக்காமலிருக்கும். மொழியின்றேல் அறிவில்லை ; ஆய்வில்லை ; பண்பில்லை ; அறமில்லை ; சுருக்கமாக உலக முன்னேற்றமே இல்லை !

மக்கள் உறவுக்கும் அன்புக்கும் மொழியே அடிப்படை. அன்பை உணர்த்தும் கருவி மொழியேயன்றோ? உள்ளுணர்ச்சியை எழுச்சியை—வெளியிட உதவுவது மொழியன்றோ?

மக்கள் அறிவு வளர வளர அவர் தம் ஆராய்வூக்கம் சிறந்து சிறந்தோங்கியது. அதன் முதிர்வு வளர வளர சிறிது சிறிதாகச் செப்பமடைந்தது. முதிர்ந்த அறிவின் பயனே மொழி. மொழிப்படைப்புக்குப் பின்னேதான் மன் பதைச் செப்பமும், நாகரிகச் செழுமையும் ஒழுக்க வாழ்வும், அறிவு—அறவுணர்வு வளர்ச்சியும், முறைகளின் வளமும் சிறந் தமைந்தன.

மக்களினம் மரபு மரபாக மொழியை நொடிதோறும், மணிதோறும், பொழுதுதோறும், நாடோறும் ஆண்டாண்டு காலமாக வளர்த்து, பேணி வாழவைத்துக் கொண்டிருக் கிறது. மொழி வளர்ச்சிக்கு ஓர் எல்லையோ, முடிவோ இல்லை. 'வளர்ந்து கொண்டே இருப்பது' என்பதுதான் மொழியின் உயிராற்றல். உயிர்ப்போடிருப்பதற்குரிய அறிகுறி மக்களி னம் குழுவாகப் பிரிந்தமைந்து நிலைத்த வாழ்வுக்கு முற்பட் டமையாமல் தனித்தனி மொழித் தோற்றம் அமைந்தது. மொழி வளர்ச்சியில் திட்டமும் கட்டுப்பாடும் சமையமுற்பட் டமையால் மொழிகளிடை வேற்றுமை—தனித்தனித் தன்மை உருவானது.

அவ்வத் தாய்மொழியினருக்கும் அவரவர் தாய் மொழியே இனிதாகும் தமிழர்க்குத் தமிழ் இனியதாம், அதனால்தான் தம் மொழிக்கே 'இனிமை' என்ற பொருளுண்டு என்பர். தம் மொழியைத் தமிழர், இன்தமிழ், பைந்தமிழ். செந்தமிழ், தீந்தமிழ், பூந்தமிழ், தேன்தமிழ்......' எனவெல்லாம் பாராட் டிப் போற்றுவர்.

தாய், பாலூட்டும்போது குழவியைக் கொஞ்சுவாள். பாலுண்ணும் குழவி பெறும் இன்பம் ஒரு தனிப்பேரின்பம். தாய்ப் பாலுக்கு இணையான உணவில்லை. அதேபோலத் தாய்மொழிக்கு இணையான மொழியுமில்லை. தாய்ப் பாலூட் டும் போது தாய் எந்த மொழியில் கொஞ்சுகிறாளோ அம் மொழியே தாய்மொழி என்பர் அறிஞர். இவ்வுண்மை யைப் 'பால்வாய்ப் பசுந்தமிழ்' என்ற தொடர் அழகாக விளக்கும்.

பால் பருகும்போதே செவியாரத் தாயின் கொஞ்சு மொழியையும் பருகி இன்புற்ற குழவி, வளரும்போதெல்லாம் கேட்டு, உணர்ந்து எண்ணி, உரைத்து மொழியினாலேயே வாழ்வை உணரலாகும் நுட்பம் எண்ணத் தக்கது. மொழி வளர்ச்சி மக்கள் வளர்ச்சியோடு தொடர்புடையது. மொழி வாழ்வும் மக்கள் வாழ்வோடியைந்தது.

மொழியுரிமைதான் மக்களுரிமைக்கு அடிப்படை. உரிமை யற்ற மொழி சிறவாததுபோல, உரிமையற்ற வாழ்வும் சிறக் காது. எனவேதான் தாய்மொழிப்பற்றை அறிஞர்கள் யாவ

ரும் போற்றுகின்றனர். மொழிப் பற்றுல்தான் நாட்டுப்பற்று நிலைபெறும். அரசியல் வாழ்வு என்ற பயனுள்ள முறையை இயக்கச் சீரிய கருவி மொழிப்பற்றேயாகும்.

முக்கால வாழ்க்கையையும் அறியத் தாய்மொழியே பயன்படுகிறது. மக்களின் எண்ணம், உணர்வு, கருத்துக் களுக்கு வடிவம் தந்து வாழவைப்பது மொழியே. மன்பதை வாழ்வு, மரபு நிலை, பண்பாட்டு நிலை ஆகியவற்றைத் தெள் ளத் தெளிய உணர்த்துவது தாய்மொழியேயாகும்.

கருத்தை உணரவும், கருத்தை உணர்த்தவும், படைப் பாற்றலை வெளியிடவும் பயனுர் கருவியாக உதவுவது அருமைத் தாய்மொழியேயாகும். வரலாறு, கலை, அறிவியல் ஆகியவை மலரத் தாயாக விளங்குவது மொழியே என்பதை உலகறியும்.

மக்களை ஒழுக்கத்தில் நிலைபெறச் செய்வது மொழி (Moral aim) மக்களுக்குத் தொழில் துறை வாய்ப்பைத் தரு வது மொழி (Vocational aim) மக்களுக்கு இன்பம் தரும் கரு வியும் மொழியே. பாடி மகிழ்வதும் பேசி மகிழ்வதும் மக்க ளியற்கை இயல்பூக்கமாகத் திகழ்வதை யாரே அறியார்?

கற்பனையில் மாந்தர் மிதக்க, கனவிலே திளைக்க, உணர்ச் சியைப் பண்படுத்தத் தாய்மொழியே வாழ்வுத் துணையாகும். இலக்கியம் ஈந்தது தாய்மொழி; புலமை நல்குவது தாய் மொழி, இத்துணைப் பயன் நல்கும் மொழியின்பால் பற்றுக் கொள்ளாதிருக்க முடியுமோ?

மனைவியை, மக்களை, உடன் பிறப்பை, பெற்றோரைவிட நம்மோடு பிறந்து, நம்மோடியைந்து, நம்மோடுறைந்து, நம்மில் நாமாகத் திளைத்து நம்மோடேயே முடிந்து, ஆயினும் நிலை பெற்று வளர்வது தாய்மொழி. அம்மொழியைக் காதலித்தே தீரவேண்டிய நிலை இயற்கையின் அமைதியாகும். மொழிக் காதலில்லாதவன் மக்கட் பண்பின் முறையினின்றும் விலகி நிற்பவனுவான். ஆயின் மொழி வெறி தீங்கு பயக்கும். தாய் மொழிப் பற்று தன்னையே தான் விரும்பிப் போற்றியொழுகு வதை ஒப்பது. தன் தாய்மொழிப் பற்றுக்காகப் பிற மொழி களைத் தாழ்த்துவது, தன் நலன் விரும்பிப் பிறனை அழிப்பதற் கிணையாகும்.

தாய்மொழிப் பற்று தமிழர்க்கு இப்போது நனிமிக இன்றியமையாததாகும். மொழிப்பற்றே வாழ்வுப் பற்றின் வேர்.

வாழ்வு வளம்பெற விழைவோர், தாய்மொழிப் பற்றுள ராகச் சிறப்புற வேண்டும்! அப்போதுதான் தமிழர் சிறக்க உயர, வெல்ல முடியும்.

'மலை எழுபது'

புலவர். மு. சுந்தரேசன்

சமய இலக்கியங்களைப் புறக்கணித்து ஒதுக்கும் புதிய போக்கும் மனமும் தமிழ்நாட்டில் இன்று அரும்பி வருகின்றன. தமிழ் இலக்கியங்களைப் பொறுத்த மட்டில் கிடைத்துள்ள நூல்களைக் கற்றுச் சுவைப்பதற்கு நாட்கள் போதா எனினும் இலக்கிய நயத்துக்காக வேனும் சமய இலக்கியங்களைப் படித்து நுகர்தல் வேண்டும். அளவின்றிக் குவிந்துள்ள காரணத்தால் பரந்துபட்ட இலக்கிய நூல்களை ஆங்கில நாட்டவர் வெறுத்துப் புறக்கணிப்பதாகத் தெரியவில்லை. ஆனால், நாமோ அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடைக்கும் சில நூல்களையே—விளம்பரமான நூல்களையே கற்று வருகின்றோம்.

சமய இலக்கியங்கள் அனைத்துமே வெறும் கொள்கைகளையும்—அறவுரைகளையும் கூறுவனவாக இல்லை: மாறாகக் கற்பனைச் சிறப்பும்—அணிகளும்—நயமும் அமைந்தவையாக உள. சமய இலக்கியங்களில் கூட பண்டைத் தமிழக மாந்தர் பெற்றிருந்த அறிவியல் தொடர்பான செய்திகளை அறிய முடிகின்றது. திருவிளையாடற் புராணத்துள் உள்ள 'மாணிக்கம் விற்ற படலம்' மாணிக்கத்தின் வகைகளையும்—முத்துக்களின் வகைகளையும்—சாதிப் பிரிவுகளையும்—குணங் குறைகளையும் உணர்த்துகின்றது.

'திரு ஈங்கோய் மலை எழுபது' என்பது ஒரு நூல்; கோய் என்பதற்குக் குகை எனப் பொருள்; குகைகளையுடைய மலை. என்பது பொருள், அகத்தியர் ஈ உருவில் இருந்து இறைவனை வழிபட்ட கோவில் ஆதலின் ஈங்கோய் மலை என்பது அம் மலைக்குப் பெயர். அம்மலையழகைச் சிறப்பித்துப் பாடினார் நக்கீரர். எழுபது வெண்பாக்களால் அமைந்த அந்த நூல் சிவன் இருக்கும் ஈங்கோய் மலைச்சிறப்பை விளக்குகிறது. சிவன் பெருமையை உணர்த்துகின்ற நக்கீரர் வெண்பாவின் ஈற்றடியால் மட்டும் சிவபிரான் பெருமையைக் கூறி ஏனை அடிகளால் மலையழகையும்—அங்குள்ள இயற்கை எழில்களையும்—விலங்குகளின் வாழ்க்கையையும்—அவற்றின் ஆடல்களையும் உணர்த்துகின்றார். வெண்பாக்கள் எலாம் முத்தொள்ளாயிரப்பாடலின் நடையினையும், இனிமையையும் நினைவூட்டுகின்றன.

திருமுருகாற்றுப்படை இயற்றிய நக்கீரரே இந்நூலையும் இயற்றி இருக்க வேண்டும் என அறிஞர் கருதுகின்றனர். இம்மலையினைச் சூழ்ந்து வாழும் விலங்கினங்களின் இயல்பை

யும், வேட்டுவர், குறவர் முதலியோர் வாழ்க்கை முறைகளை யெல்லாங்கூட சிவனைப்பற்றிப் புகழும் இந்நூல் விளக்கு கின்றது. வேட்டைத் தொழில் புரியும் வேடுவராயினும் மிக இரக்க குணம் உடையவராக இம்மலைப்பகுதியில் உள்ளவர் இருக்கின்றனராம். வேடுவர் காதல் வாழ்க்கையையும். அவர்களின் சிறந்த இயல்பினையும் புலவர் கூறுகிறார்.

குறவன் ஒருவன் வேட்டைக்குச் சென்றான்; அன்றைய வேளை உண்பதற்காக அவனுக்கு மான் ஒன்று கிடைத்தது. வேட்டையில் வல்ல அவன் அதனைக் கொல்லாமல் கையா லேயே பிடித்து வந்துவிட்டான்; வீட்டிற்கு வந்து சேர்ந்த கணவன் மானைப்பிடித்து வந்தமையைக்—குறத்தி பார்த்தாள் பெண்மானைத் தனியே பிரித்து வைத்து இந்த ஆண்மானைக் கொண்டு வந்துவிட்டாயே என்ன கொடுமை இது! என்று கணவனை நோக்கிச் சீறினளாம். மானின் காதல் உணர்வை அந்த நாகரிகம் இல்லாக் குறத்தி உணர்ந்து கொண்டுள்ள தாகச் சொல்லி வியக்கிறார் புலவர், குறத்தியின் இந்த அருங் குணத்தால் மலைப்பகுதி குறவர் அருட்பண்பை உணர்த்து கிறார் பாட்டில்!

"மலைதிரிந்த மாக்குறவன் மான்கொணர நோக்கி
சிலைநுதலிச் சீறிச் சிலைத்துக்—கலைபிரிய
இம்மான் கொணர்தல் இழுக்கென்னும் ஈங்கோயே
மெய்ம்மான் புணர்ந்தகையான் வெற்பு" —(ஈன். 60)

என்பது அந்தப்பாட்டு!

'சீறிச் சிலைத்து' என்று இரண்டு சொற்களால் குறத் தியின் கோபத்தைக் கிளறி அவள் பண்பைப் புலவர் உணர்த்துகின்றார்.

பாடப்பட்ட 70 பாடல்களிலும் பெரும்பாலும் மந்திகளின் செயல்களை விளக்கிப்பாடி இன்ப மூட்டுகின்றார். புலவர். மக்கட்குள்ள இயல்புகளை யெலாம் விலங்குகளின் வாழ்க்கை யுடன் ஒப்பிட்டுக் கண்டு மகிழ்கிறது. புலவரின் கலைமனம்! சிறு குழந்தைகள் வலிந்து உணவூட்டினாலும் உண்ண மறுக்கும் பெற்ற தாய்மார்கள் குழந்தைகட்கு விளையாட்டுக் கதைகள் கூறி எப்படியேனும் உண்பிக்க முயல்வர் இது உலகியல் குரங்குகள் வாழ்க்கையிலும் இந்த உலகியலைக் காண்கிறார் புலவர். குழந்தைகள் பசிபோக்க என்று கருதிச் சுவையான பலாச் சுளைகளைத் தேடிக் கொண்டு வந்தன சில மந்திகள் வளமான மலைப்பகுதியில் மிக இனிய உணவு களையே உட்கொண்ட அந்தக் குட்டி உண்ண மறுகிக்றது. தாய்க்குரங்கு என்ன கூறியும் உண்ண மறுக்கிறது. குழந்தையைச் சீராட்டிப் பாராட்டி உணவூட்டும் தாய்போல

குரங்கும் தன் குட்டிக்குக் பலாச்சுளையை ஊட்டி மகிழ்கிறது என்று கூறுகிறார் புலவர்.

தேன் பலவின்; வான்சுளைகள் செம்முகத்த பைங்குரங்கு
தான்கொணர்ந்து மக்கள்கை யில்கொடுத்து-வான்குரைகள்
பாராட்டி ஊட்டும்சீர் ஈங்கோயே பாங்கமரர்
சீராட்ட நின்றான் சிலம்பு. (49)

அமரர் எலாம் சீராட்டும் சிறப்பில் மகிழ்ந்துள்ள சிவனுடைய மலைப்பகுதியில் அந்தக் குரங்குக் குட்டிக்கும் சீராட்டும் பெருமை அமைந்து உள்ளதாம்.

சில மந்திகளின் சேட்டையைப் படிக்கும்போது நகையுண்டாகின்றது. பளிங்கு நிலத்தில் ஒரு குரங்கு கனியைக் காட்ட அப்பளிங்கு நிலத்தில் தெரியும் அக்கனியைப் பறிக்க ஒரு குரங்குக் கூட்டமே கூடிவிட்டதாம் பளிங்கில் தெரியும் கனியைத் தோண்டுகிறதாம் விரல்களால்! ஆனால் முடியவில்லை; ஒவ்வொன்றும் கூடி முயன்று பார்க்கின்றன என்று கூறுகிறார் புலவர்.

கல்லாக் குரங்கு பளிங்கில் கனிகாட்ட
எல்லாக் குரங்கும் உடனீண்டி—வல்லே
இரும்புகிரால் கல்கிளைக்கும் ஈங்கோயே மேனிப்
பொருந்தராப் பூண்டான் பொருப்பு (29)

என்கிறார் புலவர். சந்தனமர இலையை அசோக இலையுடன் தேனில் கலந்து மந்திக்குக் கொடுக்கிறார்களாம் குறமகளிர்.

சந்தின் இலையதனைத் தண்பிண்டித் தேன்கலந்து
கொந்தியினி துண்ணக் குறமகளிர்—மந்தி
இளமகளிர் வாய்க்கொடுத்துண் ஈங்கோயே வெற்பின்
வளமகளிர் பாகன் மலை. (33)

பன்றிகள்கூட நறவு உண்கின்றன என்று ஒரு பாடலால் தெரிகிறது.

நறவம் நனிமாந்தி நள்ளிருட்கண் ஏனம்
இரவில் இயங்குவான் பார்த்து (51)

என்கிறது பாடல்.

குறவர்களின் பரணது நிலைமிகச் சிறப்புடன் அமைந்துளது. பரணில் வாழும் குறவர் வாழ்க்கை மிகச் சுவையுடன் கவலையின்றிக் கழிகின்றது. மான்தோலும், மயிலிறகும் கொண்டு பரண் வேயப்பட்டுள்ளது என்று கூறுகிறது பாடல். அப்போதும் இனிய மதுவுண்டு இசை பாடி வாழ்கிறார்கள் அங்குள்ளோர்! இனிய நறவுண்பதாலேயே அவர்கள் தீய

ரல்லர். நல்ல பண்புநலன் அமையப் பெற்றவர்; கலைமனம் கொண்டவர்; நாடோடிகள் அல்லர் என்பதனை உணர்த்து கிறது பாடல்.

மரையதளும் ஆடும் மயிலிறகும் வேய்ந்த
புரைஇதணம் பூங்கொடியாள் புக்கு – நுரைசிறந்த
இன்னரவுண் டாடி இசைமுரலும் ஈங்கோயே
பொன்னிறவெண் ணீற்றான் பொருப்பு (61)

சூலுற்ற மகளிர் விரும்பியவற்றை வாங்கித் தருவது கணவர் வழக்கம். ஈங்கோய் மலைப்பகுதிப் பெண்யானைகட்கு சூலுற்ற காலத்தில் சந்தன இலைகளைக் கொணர்ந்து ஊட்டுகின்றன வாம் ஆண்யானைகள்!

"கறுத்தமுலைச் சூல்பிடிக்குக் கார்யானைச் சந்தம்
இறுத்துக்கை நீட்டும் ஈங்கோய்" (23)

புலவர்கள் காட்டும் கற்பனைக் காட்சிகலை இன்பம் தரக் கூடியது; புலன்கட்கு விருந்தாக அமைவது; உலகியலில் பொய்யாகக் கூறப்படுபவை கூடப் புலவருலகில் கற்பனை என்ற பெயரால் வரவேற்றுப் போற்றக்கூடிய பெருமை பெறுவதுண்டு. "குறிஞ்சிக்குக் கபிலன்" என்று புலவர் கூறுவர். திரு. ஈங்கோய் மலையை வருணிக்கும் நக்கீரர் பாடல்களைப் படிப்போர் நக்கீரர்க்கே சிறப்பளிக்க முனைவர்.

இன்னொரு பக்கத்தில் வேறு ஒரு யானைக் குடும்பத்தைக் காட்டுகிறார் புலவர். அந்த யானைக் குடும்பத்திலே எக் காரணத்தாலோ ஊடல் நிகழ்கிறது. பெண் யானையோ ஆண் யானையுடன் முகங்கொடுத்து உறவாட மறுக்கிறது. ஆகலின் பிடியின் ஊடல் தீர்க்கச் செய்வதறியாது திகைத்த களிறு பிடிக்கு விருப்பமான வாழைப்பழங்களையேனும் கொணர்ந்து தந்தால் ஊடல் அகலும்; கூடல் கிட்டும் என்று நினைத்துக் களித்து அகன்றது அது. பழங்களைத் தேடிக் கொண்டு வருதற்குள் பிடி உறங்கிவிட்டது; பொய்க்கோப மோ? உண்மைக் கோபமோ அது? அதனைப்பார்த்த களிறு எழுப்பி அதன் புலவியைத் தீர்க்க மனைவியின் குணச் சிறப்பையெலாம் கொண்டாடுவது போலக் கூறி அப்பழங் களைத்தர முனைகிறதாம்.

ஊடிப் பிடிஉறங்க ஒண்கதலி வண்கனிகள்
நாடிக் களிறு நயந்தெடுத்து—கூடிக்
குணமருட்டிக் கொண்டாடும் ஈங்கோயே வானோர்
குணமருட்டும் கோளரவன் குன்று. (11)

என்கிறார் புலவர்.

இத்தகு யானைகளின் அறிவு—மாண்பையும், இல்லறச் சிறப்பையும் விளக்கிய புலவர் ஒரு யானையின் அறியாமையை எண்ணி நகைக்கிறார். அங்கு மேய்ந்து திரிந்த பன்றிகளால் தீண்டப்பட்ட நிலத்தினின்று செம்மணிகள் ஒளி வீசிக் கொண்டிருந்தனவாம். அந்தப் பக்கமாக வந்த யானைக் கூட்டம் அம் மாணிக்கங்களைத் தீயெரிகிறது என்றே கருதி அஞ்சிப் பின்வாங்கி ஓடுகிறதாம். யானைகளின் அறியாமை கண்டு முல்லை மலர்கள் எலாம் சிரித்து எள்ளுகின்றனவாம். ஐயறிவினை உடைய யானைக் கூட்டங்களை ஓரறிவு உயிர்கள் இகழ்வதாக எண்ணிப் பாடி மகிழ்விக்கிறார் புலவர். அருகே மலர்ந்த முல்லை மலரை யானை யோட்டங்கண்டு சிரிப்பதாகக் கூறும் புலவர் நகைச்சுவையைக் கண்டு மகிழாத உள்ளமும் உண்டோ?

ஏனம் கிளைத்த இன்பவள மாமணிகள்
கானல் எரிபரப்பக் கண்டஞ்சி—யானை
இனமிரிய முல்லை நகும ஈங்கோயே தம்மேல்
வினையிரியச் சென்றுகந்தான் வெற்பு. (—15)

இவ்வாறெலாம் ஈங்கோய் மலைச்சிறப்பை விளக்கிய நக்கீரர் அவ்விலங்குகள் வாழ்க்கையில் அமைந்த அன்பு அருள், காதல் முதலியவற்றை மக்கட்கு உணர்த்துகிறார். இயற்கைப் பொருட்களை இரண்டு அடிகளில் விளக்கிப் பின்னிரண்டு அடிகளில் இறைவன் பெருமையை விளக்கும் நக்கீரர் திறம் போற்றத் தக்கது.

இலக்கியம், நோக்குவோர் கண்ணுக்கு பலவகையில் தென்படலாம். ஆயினும் இலக்கியத்தின் முருகியல் சுவையை உணராமல் வரலாற்றுச் சான்று, விலங்கு, உயிர்வகைகள், காலம் முதலிய பற்றியே ஆராய்வதற்கு இலக்கியங்களைக் கற்றால் இலக்கியம் சுவை தருதல் அரிது. இலக்கியப் பாடல்கள் படிப்போர் மனத்தைப் பண்படுத்துபவை; மென்மை உண்டாக்குபவை; விலங்குணர்வுக் கூறுபாட்டையும் தெய்வீக உணர்வுக்கான பக்குவத்தைத் தரத் தக்கவை. ஆகவே இலக்கியம் எச்சார்பு கொண்டதாயினும், எம்மதத்தைச் சார்ந்தவர் இலக்கியமாயினும், நுகர்வோன் பாகுபடுத்திப் படிப்பது வேண்டாத ஒன்று. இத்தகைய இலக்கியம் ஒன்றே படிப்பதுபோதும் என்பது நல்ல பிறவற்றை இழப்பதற்குத் துணிவதைப் போன்றது. ஆகலின் காய்தல் உவத்தல் இன்றி இலக்கியங்களைக் கற்று இலக்கியக் கலைச் செழிப்படையச் செய்வது தமிழர்கள் கடமை ஆகும்.

பத்து

•புலவர். எஸ். நடராஜன், தலைமைத் தமிழாசிரியர்,
டி. இ. எல். சி. உ. பள்ளி, புதுக்கோட்டை.

எண்களின் முறையில் பலவற்றின் காரணங்கள் புலப்படாமலேயே இருந்து வருகின்றன. இருப்பினும் ஆய்வுத் துறை வளரவளர ஏதோ ஓர் முடிவுக்கு நெருங்கிக்கொண்டே செல்கின்றோம் என்பதில் மகிழ்ச்சி. அவ்வித ஆய்வு வரிசையில் பத்து எனும் எண்ணைப்பற்றி இவண் பார்ப்போம்.

பத்து என்னும் எண் தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இருந்து, இலக்கிய இலக்கணங்களிலும் அமைவு பெற்றுவிட்டது. ஆனால் பத்து என்ற சொல் உண்மையாக இருக்க முடியாது என்பது எம் முடிவு. இன்றைய பத்து தொல்காப்பியர் காலத்திற்கும் வெகு காலத்திற்கு முன்பே பஃது என்றிருத்தல் வேண்டும். அதன் திரிபே தொல்காப்பியர் முதல் இன்றுவரை நாம் வழங்கும் பத்து என்பதாகும் என்பதே எம் ஆய்வாகும்.

தொல்காப்பியர் "பத்தன் கிளவி ஒற்றிடை கெடுவழி நிற்றல் வேண்டும் ஆய்தப் புள்ளி"—(தொல்-எழு-390) என்றும், "பத்தன் ஒற்றுக்கெட ஆய்தம் வந்திடை நிலையும் இயற்கைத் தென்ப"—(தொல்-எழு-437) என்றும் பத்து என்பதன் இடை ஒற்று ஆய்தமாகத் திரிந்தது என்பர். அவ்விதம் திரிந்த பஃது என்பதும் தனிவரல் இன்று. ஒன்று, இரண்டு முதலிய எண்களின் திரிந்த நிலையான ஒரு, இரு முதலிய எண் அடைகளை ஏற்று 'ஒருபஃது, இருபஃது' என்பதாக வழங்கும் என்பர். இதனால் பத்து என்பதே பஃது ஆயிற்று என்பதை வலியுறுத்தல்போல் இருமுறை கூறுவதிலிருந்து அறியலாம்.

ஒரு பஃது என்பதோடு ஒன்று, இரண்டு, புணரும்போது ஒரு பஃது+ஒன்று=ஒருபத்தொன்று என்றும், ஒரு பஃது+இரண்டு=ஒருபத்திரண்டு என்றும் வரும். "ஒன்று முதலாகிய பத்தூர் கிளவி ஒன்றுமுதல் ஒன்பாற்கு ஒற்றிடை மிகுமே நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும்"—(தொல்-எழு-475) என்பர் தொல்காப்பியர். ஆகவே ஒரு பஃது என்பதில் உள்ள ஆய்தம் கெட்டு, கெட்டவிடத்து 'த்' தோன்றிப் புணரும் என்பது புலனும்.

மேலே கூறிய செய்கைச் சூத்திரங்களை உற்று நோக்கின் 'த்' என்ற மெய் ஆய்தமாதலும், ஆய்தம் கெட்டவிடத்து 'த்'

என்ற மெய் தோன்றலும் இயல்பாக அமைந்துள்ளன. அவை எவ்வெப்போது இவ்விதம் திரியும் என்பதை (ஒரு பஃது, ஒருபத்தொன்று) இரு சூத்திரங்களில் (தொல்—எழு-437, 475) அமைத்துக் கொடுத்துள்ளார்.

இச் செய்கையின்படி 'த்' ஆய்தம் ஆகும் என்று வலியுறுத்தலைப் பார்க்கின்றோம். ஆனால் 'த்' என்ற எழுத்து ஆய்தம் ஆகும் நிலையை யாண்டும் கண்டோமில்லை. ஆயின் ஆய்தம் வரும் எழுத்திற்கேற்ப திரிதல் உண்டு. ஆய்த எழுத்தைப்பற்றி ஆசிரியர் தொல்காப்பியனார் கூறும் பொழுது, குற்றியலுகர இகரங்கள் தத்தம் சார்பில் வல்லெழுத்துக்களின் சிறப்புப் பிறப்பிடங்களையே தமக்கும் உரியனவாகக் கொண்டு ஒலித்தல்போல் ஆய்தமும் கொண்டொலிக்கும் என்பர். "சார்ந்துவரின் அல்லது தமக்கியல்பு இல்லெனத் தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும் தத்தம் சார்பில் பிறப்பொடு சிவணி ஒத்த காட்சியிற் றம்மியல் பியலும்"—(தொல்-எழு-101) என்பதால் தன் சார்பாய் வல்லெழுத்தின் தன்மையதாமன்றித் தனக்கென்று பிறிதோர் ஒலி உடையதன்று என்க. ஆதலின் அந்நிலையில் 'த்' ஆகல் உண்டு என்பது வெளிப்படை. ஆயினும் இவ்வித மாறுதல்கள் ஏற்படுவதை நோக்கின், இச்சொல் வேறொரு கூட்டுச் சொல்லின் தொடர்பே இவ்விதம் ஆதற் குரியது என்பதே எம் சிறு எண்ணம்.

இனி நம் ஆய்வுக்கு வருவோம். இன்றைய 'பத்து' முன்னர் பஃது என்றே வழங்கியிருத்தல் வேண்டும். மகா வித்துவான் மு. இராகவய்யங்கார் அவர்கள் "பஃது—பஃதபதி என்பதிற்போலச்—சார்ந்த தகரத்தின் ஒலிபெற உச்சரிக்கப்பட்டது பற்றியே, அவ்வாய்தம், தன்னோடு ஒலியாற் பெரிது மொத்த தகர ஒற்றின் தன்மையாய்ப் 'பத்து' எனவும் ஆசிரியர் காலத்தே வழங்கலாயிற்று. இருமொழிப் புணர்ச்சியினும் 'முஃடீது ; முட்டீது ; கஃறீது ; கற்றீது' என இருவகைப்பட வழங்குவதற்கு ஒற்றுமைப் பெரிதுமுடைய அவற்றின் ஒலிகளே காரணம் என்றும் கருதற்குரியன. அஃதை (அதனை) என்பதை அத்தை என இக்காலத்தார் வழங்குவதும் இத்தகையதே"—(ஆராய்ச்சித் தொகுதி—பக்கம் 131) எனக் கூறியுள்ளதையும் அறிந்து நோக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பஃது என்பது பல்+து என்ற இரு சொற்களின் புணர்ச்சியால் ஏற்பட்டது. 'தகரம் வரும்வழி ஆய்தம் நிலையினும் புகரின் றென்மனார் புலமை யோரே!—(தொல்-எழு-369, என்ற விதிப்படி பஃது என்றாயதே அல்லாமல் வேறு நிலையில் அல்ல

என்க. ஆய்தம் பின்னர் வருமெழுத்திற்கு ஏற்ப 'த்' ஆகத் திரிந்து 'பத்து' ஆயது. எ-டு; கல்+தீது,=கஃறீது, கற்றீது.

ஆகவே பல் என்ற ஒரு சொல்லும் 'து' என்ற சொல்லாகச் சொல்லும் புணர 'பஃது' ஆயது எனலாம். இதன் நிலைமொழியாகிய 'பல்' என்பது இதற்குமுன் ஒன்பதுவரையும் உள்ள ஓர் இலக்க எண்ணைவிட்டு இரு இலக்கம் முதற் கொண்டு பல இலக்கங்களை இனிப் பெறப்போவதால், அதற்கு அடிப்படையான இரு இலக்கத்திற்கே 'பல்' என்ற பெயரைச் சூட்டிய திறம் வியத்தற்குரியது எனலாம். ஆதலின் இன்றைய பத்தின் முதல் உருவம் 'பஃது' எனக் கோடல் ஏற்புடைத்தாம்.

இனி பத்து பிற எண்களோடு புணரும் நிலைகளைக் காண்போம்: ஒன்று முதல் பத்துவரை உள்ள எண்கள் 'அன்' சாரியைப் பெற்றுவரும். 'எண்ணின் இறுதி அன்னொடு சிவணும்—(தொல்-எழு-192) என்பதால் அறியலாம். எ-டு: ஒன்றன், இரண்டன், பத்தன்—இவை இலக்கியத்தில் பயின்று வருகின்றனவே யன்றி வழக்கில் வழங்க இல்லை.

ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள எண்களுடன் பத்து என்பது புணரும்போது ஒருபான், இருபான், ஒன்பான் என வரும். "ஒன்றுமுதலாகப் பத்தூர்ந்து வரூஉம்; அஃதென் கிளவி ஆவயின் கெடுமே; உய்தல் வேண்டும் பஃகான் மெய்யெ"—(தொல்-எழு-199). அவ்விதம் வருவதற்கு ஆசிரியர், 'பஃது' என்பதில் 'அஃது' என்பது கெட, 'ப்' நிற்க. அதனில் 'ஆன்' புணர 'பான்' ஆயது என்பர். இஃது ஒன்று முதல் ஒன்பது வரையில் உள்ள எண்களின் பின்தோன்றும் செய்கையே ஆகும். ஆனால் பத்தின் திரிபாகிய 'பான்' என்பதே 'பன்' என்று குறுகியோ, அன்றி 'பஃது' என்பதில் உள்ள 'அஃது' கெட, நின்ற 'ப்' எண்ணின் இறுதி அன்னொடு சிவணும்' என்பதால் அன் சாரியை புணர, 'பன்' ஆகியோ முன்மொழியாக நின்று, ஒன்றுமுதல் ஒன்பான் வரை இணைய, பன்னொன்று, பன்னிரண்டு, பன்மூன்று, பன்னான்கு, பன்னைந்து, பன்னாறு, பன்னேழு, பன்னெட்டு, பன்னொன்பது' என வழங்கின எனத் தெரிகிறது. இதனைப் பிற்கால நூலாகிய வீரசோழியமும்,

"பன்மூன்ற தாமுடனப்பின் வருமெனின் ஈறெழுத்தாம்
பன்னேழதாம் வன்மை பின்வரி னாயிடைத் தவ்வுமஃதாம்
பின்னும் இகரமது பன்னொன்றும் உடல்வருமேற்
சொன்னா ரியவின்பின் றேன்றுநகர ஞகார மென்றே"
(வீர—சந்தி—17)

என எடுத்தாண்டுள்ளது. இன்றும்

"கொடுத்தனன் பலிக்குத் தன்னைக் குமரனென்
றறிந்து குன்றம்
எடுத்தவன் திதிபன் ஞான்கின் இடையுவா இன்ரு
கென்று"

என வில்லியும்,

"அட்டமியில் ஓதினல் ஆசானுக் காகாது
சிட்டருக்குப் பன்ஞன்கு தீதாகும்—கெட்டவுவா
வித்தைக்கு நாசமாம் வெய்ய பிரதமையிற்
பித்தரும் பேசார் பிழை"

எனப் பிறரும் எடுத்தாண்டுள்ளதை நோக்குக. இவ்விதம் வழங்கின என்பதை அறிவிப்பான்போல் 'பன்னிரண்டு' மட்டும் அன்றும் இன்றும் வழங்கி வருகின்றது. பிற எண்கள் வழக்காறற்றுப்போக மீண்டும் பதினென்று, பன்னிரண்டாம் நூற்ருண்டுகளில் வழங்க முயன்றும் எவ்விதமோ இவை அருகி ஒழிந்தன. பிற்காலத்தில் வழங்கின என்பதற்கு ஏதோ ஓர் இரு இலக்கியங்களிலும் அமைந்துள்ளன.

இவ்விதிகளை விட்டுத் தொல்காப்பியரும், அவர் கருத்தினையே நன்னூலாரும் பின்னூலாரும் 'பன்னிரண்டு'க்குத் தனி இலக்கணம் வகுத்துள்ளனர். "பத்தன் ஒற்றுக்கெடனகரம் இரட்டல், ஒத்தது என்பர் இரண்டுவரு காலை"—(தொல்—எழு—434); 'இரண்டு முன்வரின் பத்தினீற்(று) உயிர்மெய் கரந்திட ஒற்றுனவ் வாகு மென்ப"—(நன்னூல்—198) பத்து என்பதன் ஈற்று உயிர்மெய்யாகிய 'து' கெட்டு, இடைநின்ற 'த்' 'ன்' ஆகத்திரிந்து மீண்டும் ஓர்'ன்' உடன்தோன்றி, இரண்டு புணர்ந்தது என்பர். நன்னூலாரோ 'தனிக்குறில் முன் உயிர்வரின் இரட்டும்' என்பதால் சுருக்கி அமைத்து விடுகிருர்.

ஒன்றுமுதல் எட்டு (இரண்டல்லாமல்) வரை உள்ள எண்கள், 'பத்து நிலைமொழியாக நின்று புணரும்போது குற்றியலுகர மாகிய 'து' கெட, நின்ற 'பத்' என்பதோடு 'இன்' சாரியை புணர்ந்து, 'பதின்' என்ருகிப் பின் ஒன்று முதலியன புணரும் என்பர். 'ஒன்றுமுதலாக எட்டன் இறுதி, எல்லா எண்ணும் பத்தின் முன்வரின், குற்றியலுகரம் மெய்யொடும் கெடுமே, முற்ற இன்வரூஉம் இரண்டலங் கடையே"—(தொல்—எழு—433) எ—டு பத்து + ஒன்று = பதினென்று. இரண்டல்லாத பிறவற்றையும் இவ்வாறே ஒட்டிக் கொள்க. பத்துபிற எண்களோடு புணராமல் தன்னையே குறிக்க வரும் பொழுது 'பதின்' என்ற சொல்லையே ஏற்று 'பதின்மர், பதின்சீர்' என வருதல் உண்டு. இதனை முற்ற என்ற மிகையால் அமைக்க.

பத்து என்பதின் இடை ஒற்று ஆய்தமாகத் திரிந்து பஃது ஆவதன்றி, ஆய்தமாகத் திரியாமல் இடை ஒற்றுக் கெட்டு 'பது' ஆவது உண்டு. "ஒன்றுமுதல் ஒன்பான் இறுதி முன்னர், நின்ற பத்தின் ஒற்றுக்கெட ஆய்தம், வந்திடை நிலையும் இயற்கைத் தென்ப; கூறிய இயற்கை குற்றியலுகரம் ஆறன் இறுதி அல்வழி யான" —(தொல்—எழு—437) என்பதில் 'வந்திடை நிலையும்' எனும் விதப்புக் கிளவியால் ஆய்தம் வாராது, தகர ஒற்று மட்டும் கெட்டு, ஒருபது, இருபது என ஆதலும் கொள்க. இன்று இவை இலக்கியத்திலும் பயின்று வருவன அறிக. ஏன் நன்னூலார் காலத்திலேயே இவை வழங்கிவிட்டதை அவர் இவ்விரண்டு கருத்தையும் இணைத்து, "முதலிரு நான்காம் எண்முனர்ப் பத்தின் இடை ஒற்றேகல் ஆய்தம் ஆகல் என இரு விதியும் ஏற்கும் என்ப"—(நன்னூல்-195) எனக் கூறுவதால் அறியலாம்.

ஒன்றுமுதல் எட்டுவரை உள்ள எண்களோடு பத்து புணர்ந்து ஒருபஃது, இருபஃது எண்பஃது முதலிய எண்கள் ஒரு சொல்லாகி, அதனோடு ஒன்றுமுதல் ஒன்பதுவரை புணரின், இடை நின்ற ஆய்தம் கெட்டு, ஆங்கு'த்' தோன்றுதல் முறை, "ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி ஒன்றுமுதல் ஒன்பாற்கு ஒற்றிடை மிகுமே, நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும்"—தொல்-எழு-475) என்பர். எ-டு. ஒருபஃது + ஒன்று = ஒருபத்தொன்று, இருபஃது + ஒன்று = இருபத்தொன்று. இச்சூத்திரத்தை நோக்கும் போது பதினொன்று, பதின்மூன்று (தொல்—எழு-433) முதலியன வழக்கிலும் இலக்கியத்திலும் பெருவர விற்றாகவும், ஒருபத் தொன்று, ஒருபத்திரண்டு முதலியன முன்வழங்கி அருகியும் ஒழிந்தன எனலாம். ஆயின் இருபத்தொன்று முதல் எண்பத் தொன்பது வரை உள்ள எண்கள் இப்புணர்ச்சி விதியை ஏற்று இன்றும் வழங்கிவருகின்றன. ஆனால் ஒருபத்தொன்று முதல் ஒருபத்தெட்டுவரை வழக்காறற்றுப்போக, இவை வழக்கில் இருந்தன என்பதை நினைவுறுத்தல் போல், 'பத்தொன்பது' மட்டும் எண்ணடையாகிய 'ஒரு' இன்றி வழங்கி வருகின்றது. எண் அடை நீங்கியதின் காரணம் 'பத்துக்கொடு' எனில் ஒரு பத்தையே குறிப்பதால் 'ஒரு' நீக்கப்பட்டு வழங்கியது எனக.

பத்து + ஒன்று = பதினொன்று; பத்து + ஒன்பது = பத்தொன்பது. எனும்போது உம்மைத் தொகையாகவும், இன்றும் பத்தாறு (பத்து + ஆறு ஆடைகளின் நீளத்தைக் குறித்தல்) எனவும் வழங்குகின்றனர். பத்து + பத்து என்று பெருக்கும்போது, இற்றுச் சாரியை ஏற்று 'பதிற்றுப்பத்து' எனவாகிப் பண்புத் தொகையாகவும், இற்றுச் சாரியை சாரியை அளவில் 'பதிற்றுக்கை, (பரிபாடல்-5) என

திருவள்ளுவரும் பஞ்ச சீலங்களும்

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை,
ஓய்வுறும் வழக்குரைஞர், இராசபாளையம்.

நாம் அண்மையில் ஒரு புதிய பஞ்சசீலம்—இந்தியசீனப் பஞ்சசீலம் தெரிந்தோம்; அஃது அருத்தமும் பொருத்தமும் அற்ற, ஓர் அரசியல் பஞ்சசீலம்; அது தோன்றியது போலவே மறைந்தும் போயிற்று,

கடவுட் சமயங்களெல்லாம், நமக்கு ஒழுக்கம் பற்றி அறிவுறுத்தத் தவறுவதில்லை; அவை, சிதறலாகப் பல நல்ல உரைகளும் (some good councel) கூறுகின்றன; ஆணைகளும் (many injunctions) இருக்கின்றன. யூதமும் கிறித்துவமும் அவற்றைப் பத்துக் கற்பனைகளாகத் தொகுத்தும் இருக்கின்றன. அவற்றில் சில கற்பனைகளுக்கு கிறித்துவின் அருமையான விளக்கங்களும் படிக்கிறோம். என்றாலும், அவற்றில் ஒன்றான 'கொல்லாதே' யென்னும் கற்பனை மக்களைக் கொல்லாதே யென்றே பொருள்படும் யூதமும் கிறித்துவமும் ஊன்

வருதலையும், பத்து + ஒன்று = பத்து என்பதும் பதிற்றான் பத்து என்பதைப் பயித்தோன்பத்து, பத்தோன் பத்து என வழங்குவதும் பன்னிரண்டை பன்னெண்டு என பதையும் மரூஉ ஆகக் கொள்க.

இதுவரை நாம் எடுத்துக்கொண்ட பத்தின் தோற்றத்தையும், அது பிற எண்களோடு புணரும் பான்மையையும் ஒருவாறு சுருக்கிக் கூறி இக்கட்டுரையை முடிப்போம்.

பத்து என்ற சொல் பஃது என்பதின் திரிந்த தோற்றம் என்பதும், அப்பஃதும் பல் + து என்ற மொழிகளின் புணர்ச்சியால் ஏற்பட்டதே என்பதும், நம்முன்னோர் பல இலக்கங்களுக்கு அடிப்படையாகவுள்ள இரு இலக்கத் தொடக்கத்திற்குப் பத்து என்று பெயர் வைத்தது ஏற்புடைத்து என்பதையும் ஒருவாறு முன் அறிந்தோம். அதன்பின் பதினொன்று, பன்னிரண்டு, பத்தொன்பது முதலிய பத்துக்கும் இருபதுக்கும் இடையில் உள்ள முத்தோற்றங்களையும், அவற்றில் வழக்கில் உள்ளன நிலைக்க, மற்றவை அழிந்தன என்பதையும் கண்டோம். அடுத்து பத்து உம்மைத் தொகையிலும், பண்புத் தொகையிலும், மரூஉ வழக்கில் வழங்கலையும் பார்த்தோம். ஆகவே இங்குக் கூறியவற்றையே முடிந்த முடிபாம் எனக் கொள்ளாது, இன்னும் ஆய்வு வர இது ஓர் முதற்படி எனக் கொண்டு இதனை ஏற்க விரும்புகின்றேன்.

வணக்கம்,

உணவையோ, குடியையோ விலக்கியனவல்ல. கிறித்துவச் சடங்குகளில் சிறந்த சடங்கே (Mass) ஊன் உணவையும் குடியையும் போற்றும் சடங்காக விளங்கக் காண்கிறோம். குவேக்கர் தவிர மற்றக் கிறித்தவர்கள் போர்க் கொலையை ஒரு பாவமாகக் கொள்வதில்லை; அது மட்டுமல்ல, போர்க்காலங்களில் அது பாவமெனப் பேசுபவர்களை கிறித்துவ அரசுகள் சிறையிலும் அடைத்து விடுகின்றன. சில பாதிரிமார்கள் (Christian Missionaries) விலங்கு வேட்டையை இன்ப விளையாட்டாகக் கொண்டு களிப்பதையும் காண்கிறோம். யூதம், கிறித்துவத்தினடியாகப் பிறந்த மகம்மதியமும் குடியை விலக்கியதன்றி ஊன் உணவை விலக்கியதில்லை, சைவம். இவ்விரண்டையும் விலக்குகிறதெனினும், சற்குருவை அடைதலையும் கடவுளை வழிபடுதலையும் வற்புறுத்துதலோடேயே நின்று விடுகிறது; வைணவமும் அவற்றுடன் சரணாகதி யடைதலையும் வற்புறுத்துகிறது" இப்படியாக, கடவுள் சமயங்கள் எதுவும் ஒழுக்கத்தை அவ்வளவாக வற்புறுத்துவதில்லை.

நன்னெறிச் சமயங்களில் சமணமும் பௌத்தமும் மிகச் சிறந்தனவாகும். பௌத்தத்தில் கடவுளில்லை. கடவுட் பேச்சேயில்லை. சமண அருகரும் கடவுளரல்லர்; முத்தி பெற்ற முதல் முனிவரேயாவர். இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முந்தியது பௌத்தம்; அதற்கும் 500 ஆண்டுகளுக்கு முந்தியது சமணம். பழங்காலத்தில் மொகஞ்சதரோ, அரப்பா வட்டாரங்களிலிருந்த சிவலிங்க வழிபாட்டினரில் சிறந்த சிரமணர்களின் அரும்பெரும் தவக் கொள்கைகளே பின் சமணமாயிற்று.

சமணநெறி மிகமிகக் கடுமையானது. சமணர்கள் கைக்கொள்ள வேண்டிய பன்னிரு நெறிகளில் இருள் ஒன்று—அதாவது, இருட்டில் உணவு கொள்ளக் கூடாதென்பது. இரவில் விளக்கு ஏற்றினால், அதனைச் சுற்றி பல பூச்சிகள் வட்டமிட்டு மடிந்து விடுமென்று சமணர்கள் விளக்கேற்றுவதில்லை. இருட்டிலிருந்து உணவு அருந்தினால், அவரையும் அறியாமல் உணவுடன் புழுக்களும் பூச்சிகளும் வயிற்றுக்குள் சென்றுவிடக் கூடுமென்று, பொழுதிருக்கும்போதே—சாயுங்காலத்திலேயே கடைசி யுணவை முடித்துக்கொள்வர். சமணர்களுக்கு உழவு ஒரு விலக்கப்பட்ட தொழில். உழவுத் தொழிலால் பல புழுக்கள், பூச்சிகளின் பிழைப்புக்கெடுவது மட்டுமல்லாமல் அவற்றின் உயிர்க்கே கேடும் விளைதல்கூடும் என்று அது விலக்கப்படுகிறது. (சமணத்தின் மற்றொரு பெருங்குறை—பெண்பிறவி பாவப் பிறவி; ஆதலால், அவர்கள் ஆண்களாகப் பிறந்துதான் முத்தியடைதல் கூடுமென்

பது.) மனுதர்ம சாத்திரமும் சமணமும் கூறும் காரணங்களையே கண்டு, கூடுமானல் உழவைத்தவிர்க்கச் சொல்லுகிறது.

சமணத் துறவிகள் கைக்கொள்ள வேண்டிய நெறி மற்ற நெறியினும் மிகக் கடுமையானது. துறவிகளின் நெறியில் குளியாமையொன்று குளிப்பதால் சில கட்புலனகாச் சிற்றுயிர்களுக்குத் தீங்கு நேரிட்டிடக்கூடுமென்று அது விலக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தரையில் மிகக் குறைவாகப் படும் பாதகுரடுகளை மாட்டியே நடமாடவேண்டும். அப்படி நடமாடும் பொழுதும் வாயையும் மூக்கையும் பூச்சிகள் உட்சென்றிடாதபடி துணியால் மறைத்துக் கொள்ளவும் வேண்டும்; அதுவும் காணுதென்று, மயிற்பீலி விசிறிகொண்டு முகத்திற்கு நேராக வீசிக்கொண்டு போகவும் வேண்டும்.

சமணம் அதன் கடுநெறிக்கும் மேல் வரிச்சட்டமாக ஒரு பஞ்ச சீலத்தை அமைத்தது; அது, ஆதி பஞ்சசீலமெனவும் வழங்கும் சமணர்கள் மற்ற சீலங்களில் தவறினும் இந்த ஐந்து சீலங்களையும் கடைப்பிடித்தலில் கொஞ்சமும் தவறக் கூடாதென்பது அதன் உட்கிடை.

சமணப் பஞ்சசீலத்தில் முதல்சீலம் அகிம்சை, காந்தியடிகளின் அகிம்சை (Non-violence), சமண சீலத்தின் பெயர் கொண்டதேயன்றி அதன் குணம் கொண்டதில்லை. திருக்குறளை தன் வாழ்க்கை மேற்கோள் நூலாகக்கொண்ட பண்டிதர் அல்பெர்ட் சுவிட்சரின் (Dr. Albert Schweitzer) பிற உயிர்களையும் நன்கு மதித்தலும் (reverence for all living things) அகிம்சையை எட்டியும் பார்த்துக்கொள்ளாது. எவ்வுயிர்க்கும்—கட்புலனகாத சிற்றுயிர்க்கும் சிறு தீங்கும் நினையாமை, சொல்லாமை, செய்யாமையே சமண அகிம்சையாகும் இவை நடைமுறையில் கூடியதாக இல்லாதிருக்கலாம்; என்ருலும் அதுவே சமணக் குறிக்கோள். இரண்டாவது; சமணப் பஞ்சசீலம் வாய்மை, மூன்ருவது பஞ்சசீலம் கள்ளாமை; இதனுள் பிறர் பொருளைக் கவர விரும்பாமை யாகிய வெஃகாமையும் அடங்கும். நான்காவது பஞ்சசீலம் பிரமசரியங் காத்தல்; இதனுள் குடும்ப வாழ்க்கையிலும் மிதமிஞ்சிய போகம் விரும்பாமை யடங்கும். ஐந்தாவது பஞ்சசீலம் செல்வப் பெருக்கை விழையாமை இக்காலத்திற்கு இன்றியமையாத முதன்மையான உலகப் பெருஞ்சீலமாகும்.

புத்தர் ஒரு பஞ்ச சீலத்தை வகுத்துள்ளார்; அதனைப் பௌத்தர் போற்றியும் வருகின்றனர். மறைமலையடிகள் புத்தரை திராவிட அரசிளைஞர் என்கின்றனர்; ஆனல் அதற்கு ஆதாரம் எதுவும் குறிக்கவில்லை. அதன் உண்மை எவ்வாருக

இருப்பினும், அவர் தமிழராக இருக்கக் கூடியதில்லை; அவர் தமிழராக இருந்தால், தமிழகப் பண்பாட்டினில் சிறந்தசைவ. உணவை மேற்கொண்டிருப்பார். என்ருலும் "நாம்" சிந்திக்க வேண்டிய தொன்றுண்டு. புத்தரின் பஞ்சசீலம் தமிழக ஐம் பெருங் குற்றத்தின் பஞ்சமாபாதகத்தின் மறுதலையேயாகும். புத்தர் வாய்மையையே பலபடப் பாராட்டுகிருர்: (திருவள்ளு வரும் அவர்போலவே அதனைப் பாராட்டுவதுடன் நல்லொ ழுக்கமும் அறநெறிக்கு வித்தாகும் என்கிருர்.) புத்தர் பொய்யாமையையே முதல் சீலமாகவும் கொள்கிருர். அவருடைய இரண்டாவது பஞ்சசீலம் கொல்லாமையாகும். புலாலுண்ணலைக் கைவிடாத நிலைமையில் அவருடைய கொல்லாமையும் கிறித்துவக் கொல்லாமையை அடுத்ததே யாகும். மூன்ருவது சீலம் கல்லாமை; நான்காவது சீலம் விபசாரம் செய்யாமை; ஐந்தாவது சீலம் கட்குடியாமை இப் படியாக பௌத்தமும் மகம்மதியம்போல கட்குடியை மட்டும் விலக்குகிறது; ஊன் உணவை விலக்கவில்லை.

நம் தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் தன் தமிழ் மறையில் ஒரு பஞ்ச சீலம் குறிக்கிருர்" அவர்தற் பெருமை பாராட்டாத—தன் பெயரையும் வெளியிடாது உலகப் பொது மறை இயற்றிய பழங்காலத் தமிழர். ஆதலினுற்போலும், அதனை வெளிப்படையாகச் சொல்லவில்லை" அவர் சால் பூன்றிய தூணைக் குறிக்கும் ஐந்தும்—அன்பும் வாய்மையும் நாணும், கண்ணேட்டமும் ஒப்புரவும் அத்தனையும் அவரது அன்பு நெறியின், நேர்முகப் பஞ்சசீலமாகும். அவையனைத்தும் எவரும் ஆர்வத்துடன் எளிதில் கைக்கொள்ளக் கூடியதும் படிப்படியாக வளர்த்து சால்பினை—நிறைவினை அடையக் கூடியதுமான சீலங்கள்; இவ்வைந்தும் கைவரப் பெற்றவரே திருவள்ளுவப் பெரியாராவர்; இவற்றின் நிறைவினைப் பெற்ற வரே—அருள் கண்ணேட்டமும் ஒப்புரவும் மிகமிகப் பெருகப் பெற்றவரே அவரின் சான்ருேராவர்.

திருநாவுக்கரசர் சிவகதியடைதற்கு மெய்ம்மையாம் உழவைச் செய்து. விருப்பெனும் (அன்பெனும்) வித்தை வித்தி செம்மையுள் நிற்கச் சொல்லுகிருர். நம் பெருந்தகையாளர் நாம் பேரா இயற்கை அடைதற்கு பழிக்கு நாணி அதனை விலக்கியும் பண்பின் மலராம் அன்பினையும் வாய்மையினையும் ஒரு சேரவளர்த்தும் அருள் கண்ணேட்டமும் ஒப்புரவும் நிறைந்த வாழ்க்கையினைப் பெருக்கவும் சொல்லுகிருர். இவற்றுள் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் எல்லாம் அடங்கும் (பின்கட்டுரைகளில்) இவற்றை—வள்ளுவத்தைப் பின்னும் விளக்குவாம்.

(தொடரும்)

மதிய நல்லூர்

வித்துவான். சி. கோவிந்தராசனார்,
பழம்பொருள் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்

சிற்றண்ணல் வாயில் மலையை நடுநாயக மாகக்கொண்டு, சூழலாக பத்துக்கல் அளவுக்குட்பட்டதாக அமைந்துள்ள பகுதியில் சிறந்த ஊர்கள் பல நன்னிலையில் இருந்து அழிந்திருப்பதற்குரிய சின்னங்கள் கிடைக்கின்றன. அவற்றுள் மலைக்கு நேர் கிழக்காக இரண்டு கல் தொலைவில் உள்ள மதியநல்லூர் என்னும் சிற்றூரும் ஒன்றாகும். இவ்வூர் முன்னர் சைவ, வைணவ, சமணக் கோயில்களுடன் மக்கள் நிரம்பியதொரு நிலையில் இருந்திருக்கின்ற தென்பதனை, இன்றுள்ள ஊரின் மேற்புறத்தில் சிதைந்து கிடைக்கும் பெருமாள் திருக்கோயிலும், எஞ்சியதாக நிற்கும் சிவன் கோயிலும், தீர்த்தங்கரர் திருமேனியைத்தவிர கோயில் முழுவதும் மருங்கற மறைந்த பள்ளியும், மக்கள் மனை வாழ்க்கை மேற்கொண்ட இடம் என்பதற்குரிய இலச்சினை களோடு ஆங்காங்கு மேடிட்டும் காடடர்ந்தும் கிடக்கும் பகுதிகளும் எடுத்துக் காட்டுகின்றன.

இன்று இரண்டொரு தெருக்களளவில் எஞ்சியதாக நிற்கும் இவ்வூரின் வடமேற்கில் சிதைந்த சிவன் கோயில் உள்ளது. கோயிலுக்கு முன்னர், கற்படிகளோடு கூடியதாக திருக்குளம் அமைக்கப்பட்டிருக்கின்றது. கோயில், தோரணவாயில், திருமுற்றம், நந்திமண்டபம், முகமண்டபம், கருவறை என்ற அங்கங்களோடு திருச்சுற்று அடைவு மதிலுடையதாக அமைக்கப்பட்டிருந்திருக்கிறது. இன்று எப்பகுதியும் இல்லையாயினும் கருவறை ஓரளவு சிதைந்த நிலையில் எஞ்சியதாக உள்ளது. கருங்கற்றிருப்பணியாக அமைக்கப்பட்டுள்ள இக்கோயிலின் அமைப்பு பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர் தமிழகத்தில் எழுந்த சிற்பக்கலையின் முறையைச் சார்ந்ததாகும். கோயிலுக்கு முற்பகுதியாக நின்ற தோரணவாயிலில் எஞ்சியதாக நிற்கும் நிலைச்சட்டக் கற்களிலும், முகமண்டபச் சுவர்களிலும் பல கல்வெட்டுகள் உள்ளன. கல்வெட்டுகள் யாவும் பாண்டிய மன்னர்களால் உண்டாக்கப்பட்டவைகளாகவே தெரிகின்றது. அவற்றுள், மண்டபத்தின் தென்புறச் சுவரிலுள்ள கல்வெட்டு :—

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கொச்சடைபன்மரான திரி புவந

2. சக்கரவர்த்திகள் ஸ்ரீ சுன்தரபாண்டிய தெவர்க்கு யாண்டு ५௪ வ

3. து நொனுடான கடலடையாதிலங்கை கொண்ட சோழ

4. வளனுட்டு வடகொனுடாண்ணல் வாயிற் கூற்றத்து மடியவு

5. டடையார் திருவகத்திஸ் வரமுடைய நாயனுர்கு... மத்ய மண்டலத்

6. து முடாலத்து விடங்கன் குமரனை குறியுடைய பாண்யதெ

7. வன்லெ இவ்வூரார் பக்கல் இறையிலி தெவதானமாகக்ெ

8. காண்ட நிலமாவது குவளை செய்தடி இரண்டுக்கும் பண ம ஐஞ்சு.........எழுத்து.

இம்மதிய நல்லூருக்கு மேற்குப்புறம் நன்செய் சூழ்ந்த பகுதியாகும். மலைப்பாங்கான நிலமாதலினுல் இங்கு ஆங்காங்கு பாறைப்பகுதிகள் தரை மட்டத்திற்குமேல் தெரிகின்றன. இவ்வாறுள்ள பாறைகளி லொன்ருகவுள்ளதும், பலகை யைப்போன்று மட்டமாக அமைந்துள்ளதுமான இடம் கன்னிப்பாறை என்றழைக்கப்படும் பாறையில் கல்வெட் டொன்று தெளிவாகவும் பெரிய அளவிலும் வெட்டப் பட்டுள்ளது.

கன்னிப் பாறைக் கல்வெட்டு

முற்பகுதி

1. ஸ்ரீ பராக்கிரம பாண்டிய தெவர்க்கு யாண்டு ஆருவது மார்கழி மாதத்தெ இருநாள் மடியனூர் உடையார் திருவகத் திஸ்வர முடைய நாயனுர் கொயில்தானத்தாரும் இவூர் ஊர்க்(கு) இசைந்து ஊரவரொமும் இவ்வூர் சிற்றம்பலத்தார் வளத்தாக்கு

(2) இவ்வூர் உடையார் திருவகத்திஸ்வர முடைய நாயனுர்க்கு குடி நீங்காத தெதானமாக காணிவிற்று கல்வெட்டிக் கொடுத்த பரிசாவது......................

கண்ணோட்டம்

(நக்கீரன் வழியடிமை வித்துவான் பி. மா. சோமசுந்தரனார்).

க. சொற் பொருள்

தமிழ்ப் பொழில் (மார்கழி, தை) மலர்கள் கண்ணோட்டம் பற்றிய ஆய்வாம் மணம்வீசி மிளிர்ந்தன. அதன்கண்; பரிமேலழகரும் மணக்குடவரும் கண்ணோட்டம் என்ற சொற்கு உரைத்த பொருள் சோர்வு படுவதாமெனவும், "சட்ட திட்டங்களிலும் நீதி செலுத்துவதிலும் உரிமை கொண்டாடுவதிலுமுள்ள அறமின்மையை, அறிவின்மையை நீக்கியமைக்கும் அறம்" என்பதே உண்மைப் பொருளாமெனவும் திரு. S. ராசு செட்டியார் B.A.B.L., அவர்கள் அறுதியிட்டிருந்தனர். ஆயினும் பேரறிவு வாயாப் பேதையே மாய எம் சிற்றறிவிற் சிற்சில ஐயங்க ளெழுந்துள. அவைதம்மை அவ்வறிஞர்க்கும் ஏனைய ஆசிரியன் மார்க்கும் உணர்த்தின் அவை களையும்நெறி கற்பிப்பர் என்ற கருத்தானே இதனை வரையலாயினேம்.

உ. ஐயங்கள்

அ) கண்ணோட்டம் என்ற சொற்கு ஆய்வாளர் கூறியது விரிவுரையாமேயன்றிச் சொற்பொருளாகா தன்றே! ஆயின் இச்சொல்லின் பொருளை ஒருவாற்றேனும் ஒரு கூறேனும் உணர்த்தவல்ல தொரு சொல் பரந்து கிடக்குமிப் பைந்தமிழ்ப் பரவையுள் இல்லையாய்ப் போயதோ? அறிகிலம்.

(ஆ) கண்ணோட்ட மென்ற சொற்கு நேரிய பொருள் கட்பார்வை யென்பதாம். ஆன்றோர் வழக்கு அப் பொருட்டாதல் "இனி, உருப்பசிக்குச் சயந்தன்மேற் சென்ற காவன்மை, புதல்வர் மேற் செல்லுங் கண்ணோட்டம் என்பார்க்கு அங்ஙனம் புதல்வரை நோக்கி மகிழ்வாருக்கு..." என வரூஉம் அடியார்க்கு நல்லா ருரையாற் பெறப்படும். ஆகலின், அறமும் நீதியும் ஆற்றப்படுங்கால் கண்ணோட்டம் உண்மை கேடுபயப்ப தாகும். என்னை? தான்பற்றிய ஒருவனை அஃது சார் பினைப் பற்றச் செய்து சாலா நெறிக்கண் சார்க்கு மாகலின். வள்ளுவனாரும் இதனானன்றே" "ஓர்ந்து கண்ணோடாது" இறை புரிக என முற்கூறினர். ஆகலின் சட்டத்திற்கும் நீதிக்கு அறஞ்சேர்ந்த ஆக்க மளிக்கும் பண்பு இச்சொல்லில் உளதாகக் கொள்கை இசைவதன்று என்பது.

(இ) கண்ணோட்டம் என்ற சொல் ஆய்வாளர் கண்டவழி சட்டத்திலும் நீதியிலும் அறத்தை நிலைசெய்யும் பொருட்டு எனக் கொளின் செங்கோன்மை சுட்டும் பொருள்யாதோ என்பதுகடா. முறைசெயல் குறித்தே செங்கோன்மைக் குறள்கள் எழுந்துளவாக அறமும் நீதியும் ஆண்டே நிறைவுபெற்றன வன்றே! முறை என்ற சொல் வலிந்தேனும் கோடற் கிடமில்லாக் கண்ணோட்டக் குறள்கள் முறையிலறத்தை முழுமை பெற எழுந்தனவாகக் கொள்ளல் இயையுமாறு யாதோ?

(ஈ) சட்ட திட்டங்களிலும் நீதியிலும் அறமின்மையும் அறிவின்மையுந் தங்குமேல் அவை பயனிலவாயின என்க. என்னை? ஒளி தருவானெழுந்த விழிகளில் இருள் தங்குமேல் அவை பயனிலவாயினவாறு போல என்பது. நீதியின் பாலேயே அவை தங்குமேல் ஏனைய எல்லா வற்றுள்ளும் அவை தங்குதல் உறிதியாம். இன்னும் இவ்விலேசானே கண்ணோட்டத்தின் கண்ணும் அவை தங்குமெனப்படும். ஆயின் அக்குறை களைதற்கு வேறோர் அறத்தின்துணை வேண்டப்படுவதாயிற்று. அவ்வறந்தான் யாதோ என்பதுகடா.

௩. இடர்ப்பாடுகள்

கண்ணோட்டம் என்றசொல் ஆய்வாளர் தரும் பொருளில் எவ்விலக்கியத்தினும் வழங்கிடக் காண்கிலேம். ஆயினும் இச் சொல் பயிலும் இடங்கள் தாம்பல. ஆண்டெல்லாம் இவர்வகுத்த உரையைப் புணர்த்தின் உண்டாம் இடர்ப் பாடுகளும்பல. சான்றாக,

(அ) மூதிற் பெண்டிர் கசிந்தழ நாணிக்
கூற்றுகண் ணோடிய வெருவரு பறந்தலை (புறம் 19)

(ஆ) துண்ணென் துடியொடு துஞ்சூர் ஏறிதரு
கண்ணில் எயினர் இடுகடன் உண்குவாய்
(சிலம்பு: வேட்டுவவரி)

(இ) ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை (குறள் 54)

(ஈ) கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வம்
நீடின்றி யாங்கே கெடும் (குறள் 566)

(உ) அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண் (குறள் 983)

(ஊ) முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சு முண்பர் நனி நா கரிகர் (நற்றிணை 355)

கட்டுரையாளர் கண்டபொருள் மேற்கோள்களில் யாண்டும் பொருந்தாமை அறிக. அற்றன்று அரசர்க்கு முறையுணர்த்தும் பொருளன்றோ அஃது. இவை அன்னவாயின இலை. எனவே பொருந்தாமை வியப்பன்று எனின் மேலும் ஒரு காட்டு கூறுதும்.

"சினனே காமங் கழிகண் ணோட்டம்
அச்சம் பொய்ச்சொ லன்புமிக வுடைமை
தெறல்கடு மையொடு பிறவுமிவ் வுலகத்
தறந்தெரி திகிரிக்கு வழியடை யாகுந்
தீதுசே ணிகந்து நன்றுமிகப் புரிந்து"

(பதிற்றுப் பத்து 22)

எனப் பாராள் மன்னர்க்கு அறமுரைப்பான் வந்த பாலைக் கௌதமனர் இச்சொல்லை வழங்குதல் காண்க. இப்புலவர் பெருமான் குறளின் பொருளடைவை நினைவிற் கொண்டே இதனைப்பாடினர் என்பது உற்று நோக்குவார்க்குப் புலனும் இவ்விடம் ஆய்வாளர் உரையைப் பொருத்தின் அரசன் அறம் மிகவுடையனதல் அறத்தை நடத்தும் அவனது திகிரிக்கு வழியடையாகும் தீது எனப் பொருள் தந்து வழுவுறுதல் காண்க.

௪. வள்ளுவர் தரும் விளக்கம்

மேலே காட்டிய வாற்றுல் ஆய்வாளர் கண்ட உரை நம் பண்டைப் பேராசிரியன்மார் அறியாத ஒன்று. வள்ளுவர் கருத்தேயாம் கூறியது. அதனை ஏனைய புலவன்மார் உணராது பிழைத்தனர். அதற்கு 'முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின்' என்ற நற்றிணை வரிகளைச் சான்றுகாட்டினும் எனின் அஃது ஒவ்வாது என்னை? வள்ளுவனரும் இப்புதுப் பொருளை உணராதே போனராகலின் என்பது. அஃது என்னையோ வெனிற் கூறுதும்.

வள்ளுவர் தம் குறள்கள் தெள்ளிய இனிய நடையில் கற்போர் மயங்காவண்ணம் இயன்றவை. ஆய்வாளர் கூறும் புத்துரை பண்டை ஆசிரியன் மார்க்கும் புத்துரை. வள்ளுவர்க்கு இக்கருத்து உடம்பாடாயின் அவர் ஒருவரே இதனை உணர்ந்தாராகல் வேண்டும். இலக்கியம் வழங்காப் பொருளில் அச்சொல்லை வழங்க முற்படும் வள்ளுவர் அதனை விரித்துச் செல்லும் கடம்பட்டவர். அவ்வாறு செய்தல் வள்ளுவர் தம் சிறப்பியல்புகளுள் ஒன்று. மயக்கம் நேரும் இடங்களிலெல்லாம் அவர் தம் கருத்தை விரித்தே சென்றுள்ளார். பழமை என்ற சொற்கும் வாய்மை என்ற சொற்கும் தாம் கருதிய பொருள் திரிபுபட உணராமை வேண்டி,

"பழமை யெனப்படு தியாதெனின் யாதுங்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு"

என்வும்,

"வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்"

எனவும் விரித்துச் சென்றமை காண்க. எனவே கண்ணோட்டத்தையும் வேறு பொருளில் கூறுங் கருத்தினராயின் அதனையும் விரித்தே சென்றிருப்பார். அவ்வாறு செய்யாமையே இப்புத்துரை உடன்பாடன்றென்பதும் பண்டைப் பேராசிரியன்மார் நூல்களில் பயின்றுவரும் பொருளிலேயே இதனை வழங்கினர் என்பதும் போதரும். இன்னும் இதனுன் இப்புத்துரை புலவன்மார் உணராதது என்பதேயன்றி இச் சொற்கு ஏற்புடைத்தன்றென்பதும் பெறுதும்.

ரு. வைப்புமுறை

இப்பெரியார் இவ்வாறு மயங்குதற்கும் புத்துரை கண்டு இடர்ப்படற்கும் பெரிதும் காரணம் குறளின் அதிகார வைப்பு முறையேயாகும். அரசரைச் சுட்டிய ஒரு குறளேனும் தன்னகத்தே கொண்டிலாத இக் 'கண்ணோட்டம்'' என்ற பெயர்த்தாய அதிகாரம் அரசியலில் இடம் பெற்றுள்ளதும் செங்கோன்மை முதலிய அதிகாரங்களையடுத்து வருவதுமே இம் மயக்கத்துக்கு மூலமாயமைந்தன.

ஆய்தொறும் அறிவூற்றெடுக்கும் அருமைத்தாய குறளை ஆயப்புகுவார் ஒன்றை நினைவிற் கொள்ளல் வேண்டும். வள்ளுவர் வகுத்துத் தந்த அதிகார வைப்புமுறையிலும், பாவைப்பு முறையிலும் குறளைப் பெறும் பாக்கியம் பெற்றோமில்லை. பொருட்பாலடைவைத் திருவள்ளுவ மாலையில் போக்கியார் கூறும் முறையும் உரையாரிசியன்மார் கொண்டமுறையும் உற்று நோக்குவார்க்கு இவ்வுண்மை புலனும். மேலும் உரையாசிரியன்மாராய மரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார் காலிங்கர் ஆயோர் ஒரு அதிகாரத்துள்ள குறட்பா வைப்புமுறையிலேயே ஒருவர்க் கொருவர் முரண்படுகின்றனர்.

இனிக் குறளின் இயல்பையும் கூறுவாம். மன்னகத்து மாந்தரனைவர்க்குமுரித்தாயின் அவ்வதிகாரத்துப் பாக்கள் எவரையுஞ் சுட்டா. ஒரு நெறியில் குறிக்கொண்டொழுகுவார்க்கே உரித்தெனின் அவரை நுவன்றே வருவ. ஒரு நெறியினர்க்குச் சிறப்பானுரிமை பெற்றும் ஏனையோர்க்குப் பொதுமையானுரிமை பெற்றுமிருப்பின் சிறப்புடைக் காரணம் பற்றிய பாக்கள் அவரைச் சுட்டியும் எஞ்சியவை சுட்டாதும்

வருவ. குறளுக்கு உரைகாணப் புகுவார் இப்பண்புகளை மனங் கொளாவிடில் பெரிதும் இடர்ப்பட்டும் பிழையான உரையே காண்பர்.

கண்ணோட்டம் என்ற அதிகாரம்மன்பதை யனைத்துக்கும் உரிமை பூண்டது. மன்பதை யனைத்துக்குமுரிமை கொண்ட காரணம் பற்றியே பாக்கள் எவரையும் சுட்டிச் செலாவாயின. அவ்விலேசானே மன்னர்க்கும் உரிமை பூண்ட காரணம் பற்றியே அவ்வதிகாரம் செங்கோன்மை, வெருவந்த செய்யாமை முதலிய அதிகாரங்களை யடுத்து வைக்கப்பட்டது. முன்னவற்றில் குடிபுறந்தருஉம் கொற்றம் கூறினர். பின்னதில் தனக்கு இடையூறு விளைத்தாரைப் பொறுத்தாற்றும் பான்மையினைக் கூறினர். மன்னராயினர், தமக்கு இடும்பை செய்தார். தம்மொடு பயின்றாராயின் அவர்பால் கண்ணோடுதல் தக்கதே. இஃது ஏனையோர்க்கும் ஒக்கும். ஆயின் பிறனொருவன்பாற் பிழைசெய்தார் தம்மொடு பயின்றாராயின் அவர்பால் கண்ணோடுதல் பழியும் பாவமும் பயக்கும். இதனைப் பரிமேலழகர்,

> "தம்மொடு பயின்றார் பிறரை இடுக்கண் செய்துழி அவரைக் கண்ணோடி ஒருதார்க்கு முறை சிதைதல், மேல் "ஓர்ந்து கண்ணோடாது" என்ற முறை இலக்கணத்தானும் பெற்றும். முறை சிதைய வரும் வழிக் கண்ணோடாமையும், வாராவழிக் கண்ணோடலும் ஒருவற்கு இயல்பாதல் அருமை........."

என நன்கு விளக்கினர். எனவே கண்ணோட்டம் என்ற சொற்குக் கட்பார்வையென்ற பொருள் தாம் துன்புற்று ஆற்றாமைக்குக் காரணமானார் மேற் சேறலின் அருட்பார்வை யென விரிந்து நின்றது. இதனையே பரிதியாரும்

> "கண்ணோட்டமாவது அரசற்குக் கிருபையாகிய பார்வை வேணும் என்றவாறு"

என விளக்கிப் போந்தார். எனவே பரிமேலழகர் தந்த உரை பெரிதும் சிறப்பில தாயினும் அவரும் இக்கருத்து பற்றியே உரைத்தலின் இயையும் மனக்குடவர் உரையிலும் 'குற்றம் செய்தாரை' என்னுங்கால் தன்மாட்டுக் குற்றம் செய்தாரை என்றே கொள்க. பிறர் மாட்டுக் குற்றம் செய்தாரை யென்று கொள்ளற்க. இதனால் இவர் உரையும் சிறப்புற்று விளங்குதல் காண்க. அவரது கருத்தும் இன்னதாதல் "அரசர்க்குப் பொருட்கேடு வராமல் கண்ணோட வேண்டும்" என்ற அவரது உரையே கூறும் என்க. பரிதியாரின் உரை பெரிதும் சிறப்புடையது. ஏனைய உரையாசிரியன்மாரும் இவ்வுரையே மனங் கொண்டவர்களென்பது அவர்கள் பாக்

களின் உரை கூறும் திறத்தால் பெறப்படினும் கண்ணோட்ட மென்பதைப் பரிதியா்ர் போல விரித்துரையாமையினால் கற்போர் மயலுற நேரிட்டது என்க.

ஃ. நஞ்சுண்டு அமைதல்

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார் என்ற வள்ளு வர் கருத்தினை உரையாசிரியன்மார் நன்கு உணர மாட்டாரா யினர் என ஆய்வாளர் உரைத்தாராலோவெனின் கூறுதும். உரையாசிரியன்மார் நன்கு தேர்ந்தே உரைத்தனரென்பதை அவர்களது உரையே நன்கு காட்டிவிடும். அவ்வாறு கருமம் சிதையாமல் கண்ணோடுதலையே மேலேயாம் காட்டிய "சினனே காமங் கழி கண்ணோட்டம்" என்ற பாலைக் கௌத மனார் பாடல் விளக்குகிறது. இப்பாடலினை நன்கு உணர்ந்து பிறகு உரையாசிரியன்மார் உரையையும் நோக்கின் பண்டைய ஆன்றோர் கருத்தை—வள்ளுவர் கருத்தை உளங்கொண்டே உரை செய்தனர் என்பது விளங்கும்.

இனி, ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும் பொருத் தாற்ற லென்னையெனிற் கூறுதும். இப்பண்பும் பண்டைத் தமிழரசர்பால் பொலிந்த ஒன்றே ஆம். இப்பண்பைக் குமண வள்ளலிடத்தும், மெய்ப்பொருள் நாயனாரிடத்தும், ஏனாதிநாத நாயனாரிடத்தும், மணிமேகலை யிடத்தும், வாலி யிடத்தும், மற்றும் "என்னைப் பத்துத் திங்கள் சுமந்த பொறையுடையாய், அன்னையே! இந்தத் தமிழ்க் குழந்தை யைச் சிறிது நேரம் சுமக்கலாற்றாது போயினையோ" என்று தமிழ்ப் புலவர் ஒருவர் தம் தாயின் முதுகின்மேல் அமரக் கண்டு கூறிய சருக்கரை வள்ளலிடத்தும் காண்க.

பெயக்கண்டும் நஞ்சுண்டமைதல் இயலாதெனக் கருதி யன்றோ ஆய்வாளர் அதனை உருவக நஞ்செனக் கொண்டு இடர்ப்பட்டார். அதனாலே யன்றோ நற்றிணை ஆசிரியர் தவறிழைத்தார் என்று குற்றம் கூறினார். அகலாது அணு காது தீக்காய்வாய் போல்க என இகல் மன்னர்ச் சேர்ந் தொழுகுவார்க்கு நெறி கற்பித்த வள்ளுவர் பெருமான் அவ் வண்ணம் சேர்ந்தொழுகுவார்பால் செருமிகு சினவேல் வேந் தர் தாம் ஒழுக வேண்டும் நெறியும் நுவலற் பாலாரன்றே! அதனையே கண்ணோட்டம் என்ற அதிகாரத்தாற் கழறின ரென்பதைக் கருத்திற் கொள்ளாது இஃது முறை செய்ய வேண்டுவதன் பகுதியென யாதொரு மேற்கோளுமின்றித் துணிந்து நம் தொன்மைப் பேராசிரியன் மாரோடும் பெரிதும் முரண்பட்டார். இவர் தம் உரையே மெய்யுரையெனக் கொள்ளின் முன்னைய முதறிஞன்மாரும் இன்றைய ஆன்றவிந் தடங்கிய ஆன்றோரும் மெய்யுரை காணமாட்டாது மயலெய்

தினர் என்றே கோடல் வேண்டும். இன்னும் இதனனே வள்ளுவர் மீதும் கருத்தைத் தெளிய வைக்காத குற்றமும் ஏற்ற வேண்டிவரும். இஃது இலக்கிய மரபுக்கே மாறு கொள்ளும்.

பெயக்கண்டும் நஞ்சுண்டமைந்த பெற்றிமை பற்றிய ஐயந்தான் என்னை கொல்? பெண்ணுள் பாகத்துப் பெரியோன் பரவை பெயக்கண்டும் நஞ்சுண்டமைந்தமை கேட்டாயன்றே! கொல்லாமை யறம்பேசிக் கொலைசூழும் குண்டர்கள் பெயக்கண்டும் நஞ்சுண்டமைந்த செய்தி ஆளுடைய அரசுபால் கேட்டாயன்றே! மூங்கையாய்ப் பிறந்து முளரிவாய் திறந்த ஞான்றே முருகன் முளரியிணை வழுத்திய குமரகுருபரர் பிறரிட்ட பன்றியூனைப் பைம்போதாக்கிய பான்மை கேட்டாயன்றே! இச்சான்றோர் மனவிளக்கமும் அருள் விளக்கமும் கைவந்தாராதலின் பெயக்கண்டும் நஞ்சுண்டமைந்தனர். மேனாட்டுச் சாக்ரடீசு என்பார் மனவிளக்கம் பெற்றாராயினும் அருள் விளக்கம் அமையாச் சிறுமையால் பெயக்கண்டும் நஞ்சுண்டு போந்தனர். நம் காலத்தே வதிந்த காந்தியடிகளும் அத்தகைமையாளரே யன்றோ! இவர்களே நனி நாகரிகர் என்றறிக. பகைஞர் பாலாராயினும் கண்ணோடுதல் வேண்டும் என்பதை.

> "ஆக்கரிய மூக்குங்கை யரியுண்டா ளென்றுரை
> நாக்கரியுந் தயமுகனார் நாகரிக ரல்லாமை
> மூக்கரிந்தீர்......"

எனக் கம்பநாடர் கூறுதல் காண்க. பகட்டான உடையும் பேச்சும் நாகரிகப் பண்புகளாக. கண்களில் அருட்பார்வை பொலிதலே நாகரிகம் எனக்கொண்ட பழந்தமிழர் பேரறிவை என்னென்று வியப்பது!

குறள் பெருமையுடைய நூல். அதனைத் தத்தமக்கு ஏற்றவாறு பொருள் கொள்ளுவதில் பலர் ஈடுபகின்றனர். நாத்திகம் பேசி நாத்தழும் பேறுவாரும் காந்திய நெறியைக் குறளைக் கசக்கிக் காண முற்படுவாரும் பொதுவுடைமை காணவிழைவாரும் வள்ளுவர் தமிழர் நெறிக்கு உடைமை என்பதை மறந்து குறளுக்கு உரையெனத் தத்தமக்குத் தோற்றிய வாறு அதனைக் குழப்பி வள்ளுவர்க்கு வடுச் செய்தனர். எனவே அறிஞர் வள்ளுவர் உளத்தைத் தெளிந்து பிறகு குறளுக்கு உரைகாண முற்படுவாராக. உரையாசிரியன் மாரும் தாம்பற்றிய சார்பினுல் திரிபுடைய உரைகளை ஆண்டாண்டு கூறியுள்ளனர். அவைகளை நன்கு ஆய்ந்து கண்டு உண்மைப் பொருளை யுரைப்பாராக.

வாழ்க தமிழ்.

களவியல் உரைநலம்.

(இரண்டாம் நூற்பா உரை)

(திருவாட்டி மேனகை அம்மையார், இராணிப்பேட்டை)

"அஃதேயெனின், கந்தருவ வழக்கத்தோடொக்கு மெனவே, எத்திறத்தானுங் குறைபாடின்மை முடியாதோ எனின் முடியாது. கந்தருவர்க்கும் ஞானக் குறைபாடும் தருமக் குறைபாடும் ஆள்வினைக் குறைபாடுமுண்டு. இச் சொல்லப்பட்டன சிறிதேயென்றே ஒப்பித்து, பொருவிறப் புச் சூத்திரத்தாற் சொல்ல வேண்டும் என்பது."

என்று விரிவுரை கூறுவர். இதன் கண் வேற்றுமை யிலர் என்றுரைப்பாருரை இயையாமை பேசும் பெற்றியும், ஆயத்தினீக்கியும் இளைஞரினீக்கியும் பிரித்துக்கோடல் என்ற வுரை பொருந்தாமை காட்டும் திறனும் சிந்திக்கற்பாலது.

திரிபிலர் என்ற உரை பொருந்தாமை காட்டுவார் "கந்தருவ வழக்கத்தோடொக்கும் எனவே வேற்றுமையின்மை முடிந்தது" என்றூர். கந்தருவ வழக்கம் போல்வது என்ற அளவையானே திரிபின்மை முடிந்ததென்னும் கூற்று உடம் பாடாகாது. என்னை? கந்தருவர் கொடுப்பாரும் அடுப்பாரு மின்றிக் கூட்டம் பெற்றின்புறுவர் என்ற இயல்பே பெறப்படு வதன்றிக் குணத்தினும் கல்வியினும் உருவினும் திருவினும் திரிபிலர் ஒருவரோடொருவர் என்ற ஒப்புமை பெறப்படாதென்க. இவரும் மேலைப்பாவின் உரைக்கண்.

"கந்தருவ வழக்கம் என்பது—கந்தருவர் என்பார் ஈண்டுச் செய்த நல்வினைப் பயத்தால் ஒருவர் கொடுப்பாரும் அடுப்பாருமின்றி, இருவரும் ஒரு பொழிலகத்து எதிர்பட்டுப் புணர்வது. இது காந்தர்ப்ப மணம்."

என்றே கூறிச் சென்றூர். இதனுள்ளும் காட்சி பெற்றுக் கந்தருவர் கூட்டம் பெறுவர் என்னும் பரியேன்றித் திரிபின்மை பெறப்படுமாறில்லை. அற்றன்று கந்தருவ வழக்கம் திரிபின்மை யுடைத்தென்று உணரப்படும் என வாதிப்பான் புகின் அவ்வுணர்ச்சி அம்மணம் வழங்கும் மறையோர்க் கன்றே இயல்வது. பொருளொழுக்கம் பற்றி நின்று புலஞ் சிறந்த தமிழ் நாட்டார்க் கன்றென மறுக்க. அன்றியுங் கந்தருவ வழக்கத்தோடொப்புமை கூறினர் எப்புடை அவ்வொப் புமையேலும் என்றிலரன்றே! என்னை? குவளை யுண்கண் என்றுழி நீலவண்ணமட்டும் ஒப்புமை காட்டுவர். மற்று ஏலாப்புடை பெரிதன்றே! அன்றியுங் களவொழுக்கத்தின் இலக்கணம் நுதலிச் செல்வார் அதனை முற்றுற மொழிதல்

வேண்டுமென்றே! ஒப்புமை காட்டிய அளவானே இலக்கணம் நுதலிற்றுமாறில்லையே! காட்டிய ஒப்புமையும் தமிழரிடை வழங்கா வொன்றும். ஆகலின் திரிபின்மை கூறல் வேண்டுமென்றறிக.

களவொழுக்கம் அனையதோர் ஒழுக்கமே அயல் நாடுகளில் கந்தருவம் என்னும் பெயரிற்று என்ற கருத்தானே ஆசிரியர் உரைத்தார் என்பது,

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்
கன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றலெட்டனுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோ ரியல்பே."

எனத் தொல்காப்பியர் கிளத்தலாற் காண்க. இந்நூற்பா கருத்தை,

"தமிழகத்தில் அன்பின் ஐந்திணைக் கூட்டம் என்று கூறப்படுமெனவும் இஃது யாழோர் மணம் எனப் பிறநாடுகளில் உள்ளார் ஒரு வகுப்பினராலும் கைக்கொள்ளப்பட்டு வருவது எனவும்" என்றும்,

"தமிழரது வாழ்க்கைக்குப் புறப்பான ஆரிய முறையினையோ அல்லது வேற்று நாட்டு மக்கள் முறையினையோ எடுத்து அவற்றிற்கு இலக்கணங் கூறப்புகுந்தாரல்லர். தாம் கூறப் புகுந்த தமிழரின் களவொழுக்கத்தோடொப்பது பிற நாட்டின் கண்ணும் உண்டென்றும், அஃதங்கே யாழோர் மன்றல் எனப் பெயர் பெறுமென்றுங் கூறினாரல்லது அவ்வியாழோர் மன்றலைப்பற்றி வேறேதுங் கூறினாரல்லர். மேலும், தமிழரின் களவொழுக்கத்தோடொப்பது வேற்று நாட்டகத்தும் உண்டென்று கூறிய ஆசிரியர், தமிழரின் கற்பொழுக்கத்தைக் கூறுகின்றுழி அதனோடொப்பது வேற்று நாட்டகத்தும் உண்டென்று கூறாமையால் அவர் காலத்தில் வடக்கேயிருந்த ஆரியர்க்குள்ளும் பிறர்க்குள்ளும் கற்பொழுக்கம் நடைபெறவில்லை என்பதே துணி பொருளாம்."

என்று மாண்புமிகு மறைமலையடிகள் விளக்கியருளுதல் காண்க. கற்பொழுக்கம் அவர்பால் சிறவாதென்பது,

"கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும் ஈண்டுக் கற்பின்றிகளவே அமையாதென்றற்குத் "துறையமை" என்றார்.

எனவரூஉம் நச்சினார்க்கினியர் உரையாலும் பெறப்படும்.

நற்றமிழர் நாடும் களவொழுக்கத்துக்கும், நல்லியாழ்த் துணைமையோர் மணத்துக்கும் இத்துணை வேறுபாடுகள் உள

வாகக், களவின் இலகககணம் உணர்த்தப் புக்கார் அதனை முற்றுறக்கிளத்தலே முறையாம். எனவே கந்தருவ வழக்கம் என்றதனுல் திரிபின்மை முடிந்தது எனலும் தமியராய்ப் புணர்தல் முடிந்தது எனலும் போலி உரையாம். என்னை? கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும் எனவே ஒருத்தி பலரோடு கூட்டம் பெறுவள் என்பது பெற்றும். அத்துணை பேரும் எட்டுணையும் அவளோடு திரிபிலர் எனல் ஏலாது. அன்றியும் கூட்டம் தனிமைக் கண் நிகழுமே யல்லாது யாவர் மாட்டும் பலர் நாப்பண் நிகழ்தலில்லை என் பதுவும் கருதுக.

ஆயின் 'தானே அவளே' என்ற தொடர்க்குத் திரி பின்மை என்று உரை கூறுதல் புனருத்தமாம் என்ற உரை இயையாதோ எனில் இயையும் என்க. என்னை? 'இருவயி னொத்தல்' என இந்நூற்பாவில் வருந்தொடரான் திரிபின்மை முடிந்தது ஆகலின் என்பது. இருவயினொத்தல் என்பது காமப் புணர்ச்சியின் மேலன்றே வைத்துக் கூறப்பட்டது. அஃது திரிபின்மைக் காமாறு என்னையெனிற் கூறுதும். அவர் திரிபுடைய ராயவழி அவரான் துய்க்கப்படும் இன்ப மும் திரிபுடைத்து. தலைமகள் மிக்காளாய வழி அம்மிகை அவள் நெஞ்சில் நின்றுறைப்ப அதனுல் செருக்குறுவள். ஆகலின் இருவயினொத்தல் அவள்பால் நிகழாது. அதனை னன்றே ஆசிரியர் தொல்காப்பியனுர்,

"பிறப்பே குடிமை யாண்மை யாண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே."

என ஒப்புமை வேண்டினு ரென்பது. தலைமகன் தலைமகளி னும் சில நலங்கள் சிறந்தோன் எனினும் கடியப்படாது என்பார்.

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி யுயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப
மிக்கோ னுயினுங் கடிவரை யின்றே."

என்றும் விதந்தோதிச் சென்ருர். திருக்கோவையாரிற் பயிலும் இருவயினொத்தல் என்ற துறையினை நினைவு கொண்டே நக்கீரர் இருவயினொத்தல் என்ற தொடருக்கு உரை கண்டனராகலின், அவர் உரை ஒரு சிறிதே ஏற் புடைத்தா மென்க.

இனித் 'தமியர் காண' என்று நூற்பா கிளந்தோதிச் செல்வதே 'தானே அவளே' என்பது 'தமியராய்ப் பிரித்துக்

கோடல் என்பதாம்' என்ற உரை பொருந்தாமைக்குச் சிறந்த சான்றும். இவ்வாறு கருத்து வேறுபாடுகளை எடுத்துக் காட்டி அதனை நீக்கப்புகும் உரையாசிரியர்க்கு யாம் நன்றி பாராட்டுங் கடப்பாடுடையோம். இவை நக்கீரர் காலக் கருத்து வேறுபாடுகளன்று. அவர்க்குப் பின்னே கிளைத்து முசிறி யாசிரியர் நீலகண்டனர் காலத்தே உரை ஏட்டில் வரையப்படுங் காலத்தே கூட்டிப் பெய்தனவாகக் கொள்க.

"அகத்திய முனிவரைப் பற்றிய குறிப்பு முதன் முதல் நீலகண்டனர் என்பவரால் நுழைக்கப்பட்டது. இறையனுரகப் பொருளுரைக்கு முற்பட்ட எந்தப் பழந்தமிழ் நூலிலும் அகத்தியரைப் பற்றிய குறிப்புமில்லை. அவர்க்குத் தொல்காப்பியர் மாணுக்கர் எனவாதல், தொல்காப்பியரின் இயற்பெயர் திரண தூமாக்கினி எனவாதல் அப்பழைய செந்தமிழ் நூல்களில் யாண்டும் நுவலப்படவுமில்லை. அதனாலிவையெல்லாம் தமிழ் மொழியின் சிறப்பைக் குலைத்துத் தமிழாசிரியரின் தனிப்பெரு மாட்சியினைச் சிதைக்கப் பார்ப்பனப் புலவர் சூழ்ச்சி செய்து கட்டிய முழுப் பொய்யும் புரட்டுமாதலை உண்மைத் தமிழராவர் அனைவருங் கருத்திற் பதிக்கற்பாலார்."

எனவருஉம் மறைமலையடிகளாரின் முடிவும் இவ்வுரை பிற்காலத்தே கூட்டியும் குறைத்தும் வரையப்பட்ட தென்பதை உறுதிப்படுத்தும்.

பொருவிறப்பு கூறப்படுந் திறமும் அவ்வுரையும் போற்றிக் கோடற் பாலது.

ரு. **தமியர் காண**

இனித் 'தமியர் காண' என்ற தொடர்க்குத் தம் உணர்வினரன்றி எதிர்ப்பட எனப் பொருள் கண்டு அதனை விளக்குமுகத்தான் பின்வருமாறு விரிப்பர்:—

"அஃதே எனின், இவர் தம் உணர்வின ரல்லராகின்றது காணுமுன் ஆபவோ, கண்டபின் ஆபவோ, காட்சியோடு உடன் ஆபவோ எனின் காணுமுன் தம் உணர்வினர் அல்லராப எனின் காட்சி காரணமன்றாயிற்றும் தம் உணர்வினரல்லராதற்கு. அல்லதூஉம், காரணமின்றி ஆகலான் எப்பொழுதும் தம் உணர்வின ரல்லராகல் வேண்டும்.

"இனிக். கண்டபின் தம் உணர்வின ரல்லாரெனின் காட்சியது நீக்கத்துக் கண்ணும் தம் உணர்வினரல்லராகல் வேண்டும். உண்டபின் வந்தான் சாத்தன் என்றால் உண்டற் கருமக் கழிவின் கண் வந்தது போல. அல்லதூஉம் கண்டபின் தம் உணர்வினரல்லராகவே, கண்ட சமவாயத்

துத் தம் உணர்வினராகல் வேண்டும். ஆகவே ஈண்டும் தம் உணர்வினராய் நின்றார் பின்னை மயங்குதற்குக் காரணம் என்னையோ என்பது.

"இனிக் காட்சியும் தம் உணர்வினரல்லராகலும் உடன் நிகழுமே எனின் காட்சி என்னுங் காரணத்தால் தம் உணர் வினரல்லராதல் தன்மை நிகழற்பாற்றன்று. ஒரு காலத்து ஓரிடத்து ஒருங்கு தோன்றின பொருள் ஒன்றனை ஒன்று முடித் தன எனப் படாமை காண்டும், ஆவிற்கு இருகோடு போல என்பது. அதனால் மூன்று அல்லது நான்காவது காலம் இல்லை. இன்மையின் அவர் காட்சியானே தம் உணர்வின ரல்லர் என்பது முடிக்கல் வேண்டும். எங்ஙனம் முடிக்குமா றெனின் காணுமுன்னே தம் உணர்வினரல்ல ராகல் தன்மை உடையராகலின் என்பது. என்னை? ஏறுதி மோதிரம் செறித்தத் திருவுடையான் ஒருவன், ஏறுதி மோதிரம் செறிக் கும் அத்திரு அவன் செறிக்கின்ற பொழுதே உண்டாயிற் றன்று. முற்கொண்டு அமைந்து கிடந்தது. அரசு வீற்றி ருந்த திருவுடையான் ஒருவன் அரசு வீற்றிருக்கும் அத்திரு அரசு வீற்றிருக்கின்ற பொழுதே உண்டாயிற்றன்று. முற் கொண்டு அமைந்து கிடந்தது. அது பின்னை ஒரு காலத்து ஓரிடத்து ஒரு காரணத்தான் எய்துவிக்கும். அதுபோல இன்ன நாள் இன்ன பக்குவத்து இன்ன இடத்து இவள் காரணமாக இவன் தன் உணர்வினனல்லனும் என்பதூஉம் இவன் காரணமாக இவள் தன் உணர்வினள் அல்லளாம் என்பதூஉம் முன்னே முடிந்து கிடந்தன. அது பின்னுங் கொணர்ந்து எய்துவிக்கும். என்னை? "ஒளிப்பினும் ஊழ் வினை யூட்டாது கழியாது" என்பதாகலான்.

"காட்சி துணைக் காரணம் அவ்வினை பயத்தற்கு. வித்து முளைத்தற்கு நிலனும் நீரும் இருதுவும் துணைக்காரணமாயிற் றுப் போலவும், சோறுதல் இயல்பிற்றாகிய அரிசி சோறுதற்கு அடுவானைத் தொடக்கமாகவுடைய காரணம் துணைக் காரண மாயிற்றுப் போலவும் என்பது. அஃதே யெனின், காட்சி துணைக் காரணம் பிற எனின் காட்சியின் முன் கிளர்ந்ததோ, உடனே கிளர்ந்ததோ உள்ளத்துத்தான் கிளர்கின்றது, எனின், முன்னைக் கடாவந்தெய்துமால். என்னையோ எனின் காட்சியோடுடனே கிளரும். என்னை? இருட்டகத்து விளக் குக் கொண்டு புக்கால், விளக்கு வாராத முன்னரும் இருள் நீங்காது; விளக்குவந்த பின்னரும் இருள் நீங்காது. விளக்கு வருதலும் இருள் நீக்கமும் உடனே நிகழும் அதுபோலக் காட்சியும் ஞான வொழுக்கக் குணங்களது தன்மை அழிவும் உடனே நிகழும். விளக்கினைக் காட்சியாகக் கொண்டு ஞான வொழுக்கங்களை இருளாகக் கொள்க."

என்று விரிவுரை கூறினர். இவ்வுரையினலத்தைச் சொற்பாடு என்ற தலைப்பின் கீழ் விரிப்பாமாகலின், ஈண்டுக் கூறுதொழிந்தனம்.

ச. காமப் புணர்ச்சி

" இனிக் காமப் புணர்ச்சி என்பது—தலைமகனும் தலைமகளும் தமியராய் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுத் தம் உணர்வினரன்றி வேட்கை மிகவினுற் புணர்வது என்பது."

என்று காமப் புணர்ச்சி என்ற தொடர்க்குப் பொருள் விரிப்பர். இதன் நலமும் சொற்பாடு என்ற பகுதிக்கண் ஆராயப்பட்டுள்ளது ஆண்டுக் கண்டு கொள்க.

ரு. தமியர் காணல்

தலைமகனும் தலைமகளும் முறையே பற்பல் நூருயிரவர் கூர்வேல் இளைஞரின் நீங்கியும் பற்பல நூருயிரவர் கண்ணும் மனமும் கவரும் ஒண்ணுதல் மகளிரின் நீங்கியும் ஒருவரை யொருவர் காண்டல் பொருட்டாய்த் தமியராவர். தலைமகன் வேட்ட மேற்கொண்டு விடையென நடைபயின்று தலைமகள் நின்ற பொழிலுள் புகும் பொலிவும், தலைமகளும் தண்டேன் துளிர்க்கும் வேங்கை நாண் மலர் கொய்தவிடத்து இளவெயில் எறிப்ப இளமயிலாடுஞ் சாயல் நோக்கி நிற்கும் திறனும் உரைக்கப்படும் திறம் பெரிதும் இன்பம் பயப்பது. பிற்றை நாள் உரையாசிரியன் மாரும் அப்பகுதியைப் பெரிதும் விரும்பித் தம் உரைக்கண் பெய்து உவகைமீக் கூர்ந்தனர். அன்றியும் இற்றை நாள் பத்தாம் வகுப்புத் தேர்வுக்குரிய பாடப் புத்தகத்தும் அப்பகுதியைச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் பாடமாக வைத்துச் சிறப்பு செய்வர். இத்துணைப் பெருமைய தாகலின் அவ்வுரையினை யாமும் ஈண்டுத் தருவாம்:

" ஆயின், இவர் மேற்பொருவிறந்தார் தலைமகனுந் தலைமகளும் என்றமையான், அவனும் கற்கந்தும், எறிபோத்தும், கடுங்கண் யானையும், தறுகட் பன்றியும் கருவரையும் இருநிலனும், பெருவிசும்பு மனையார், ஆளிமொய்ம்பினர், அரிமான் துப்பினர் பற்பல் நூருயிரவர் கூர்வேல் இளைஞர் தற்சூழச் செல்வன் என்பது முடிந்தது. இவளும், உடன் பிறந்து உடன் வளர்ந்து, நீர் உடனுடிச், சீர் உடன் பெருகி, ஓல் உடனுட்டப், பால் உடனுண்டு, பல், உடனெழுந்து சொல் உடன் கற்றுப் பழமையும், பயிற்சியும், பண்பும், நண்பும், விழுப்பமும், ஒழுக்கமும், மாட்சியு முடையார் பற்பல் நூருயிரவர் கண்ணும் மனமும் கவரும் ஒண்ணுதல் மகளிர் தற்சூழத் தாரகை நடுவண் தண்மதிபோலச் செல்வள் என்பது முடிந்தது. (தொடரும்)